19th November 2023

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 06 | பக்கங்கள் - 13 | editor.uthayam@gmail.com

உள்ளே!







# முக்கிய கட்டத்தை நோக்கி இஸ்ரேல் - ஹமாஸ் மோதல்

## மேற்கு கரையிலும் போராட்டம் வெடிக்கும் வாய்ப்பு

## மக்களை கொத்து கொத்தாக கொல்லும் இஸ்ரேல்

இஸ்ரேல் மிகக் கடுமையாக பொதுமக்களை தாக்கி வருகின்றது. சனியன்று காலை அஷ்ஷிபா வைத்தியசாலையிலிருந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் நோயாளிகளை கூட கவனிக்காது சகலரையும் அந்த இடத்திலிருந்து வெளியேற்றுமாறு வைத்தியர்களையும் தாதியர்களையும் அழைத்து ஆணித்தரமாக கட்டளையிட்டுள்ளது. அவ்வாறு கட்டளையிட்டாலும் அங்கிருந்த வைத்தியர்கள் அதற்குக் கட்டுப்பட்டதாகத் தெரியவில்லை.

அங்கிருந்து தற்போது கிடைக்கும் தகவலின் படி வைத்தியர்கள் அதனை கடுமையாக மறுத்து தங்கள் உயிருள்ளவரை நோயாளிகளைக் காப்பதில் உறுதி கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேநேரம், இன்னொரு புறம் ஐ.நா.வினால் நடத்தப்படுகின்ற ஜபலியா அகதி முகாமிலுள்ள

ஒரு பாடசலை மீது இஸ்ரேல் கடுமையாகத் தாக்கியதில் குறைந்தது 50பேருக்கு மேல் படுகொலை

02ம் பக்கம்பார்க்க...

## யாழ். பல்கலை பட்டப் பின்படிப்பு கல்வி நிறுவனம் நிறுவப்படாதது ஏன்?

**பாராளுமன்றில் இம்தியாஸ் கேள்வி**



ருஹூனு மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகங்களுக்கு

02ம் பக்கம்பார்க்க...

## இந்திய இராணுவம் வெளியேற்றப்படும்: மாலைதீவு உத்தியோகபூர்வ அறிவிப்பு

இந்தியா தனது ராணுவத்தை வாபஸ் பெறுமாறு மாலத்தீவு அரசு அதிகாரப்பூர்வமாக கேட்டுக் கொண்டுள்ளது.

மாலைதீவில் இருந்து ராணுவ வீரர்களை திரும்பப் பெறுமாறு இந்தியாவிடம் மாலத்தீவு அரசு முறைப்படி கோரிக்கை விடுத்துள்ளதாக

02ம் பக்கம்பார்க்க...

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இஸ்ரேல்

**தென் ஆபிரிக்கா நடவடிக்கை**

இஸ்ரேலை சர்வதேச குற்றவியல் நீதின்றத்துக்குக் கொண்டுவர தென்னாபிரிக்கா நடவடிக்கை இஸ்ரேல் காஸாவில் மேற்கொண்டுவரும்

02ம் பக்கம்பார்க்க...

## கிழக்கு ஆளுநராக நஸீர் அஹமட்?

- ஊவா செந்தில் - மேல் முஸம்மில்
- சிங்கள வாரப் பத்திரிகையில் தகவல்



கிழக்கு மாகாண ஆளுநராகப் பதவி வகித்து வரும் செந்தில்

02ம் பக்கம்பார்க்க...

## அலிசப்ரி பதவி நீக்கம்; நீதி மன்றம் இடைக்கால தடை உத்தரவு



புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்றி ரஹீமை பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் நீக்குவதற்குத்

02ம் பக்கம்பார்க்க...

## நாட்டை நாசமாக்கியவர்களிடம் நஷ்டஈடு பெற நீதிமன்றை நாடுங்கள்

**நாட்டு மக்களிடம் சஜித் வேண்டுகோள்**



நாட்டை வங்குரோத்தாக்கியவர்களிடம் நஷ்ட ஈடு பெற நீதிமன்றத்திற்கு செல்லுங்கள் சட்ட ஆதரவை நாம் வழங்குகிறோம்.

இந்நாட்டை வங்குரோத்தாக்கிய பொருளாதாரக் கொலையாளிகள்

02ம் பக்கம்பார்க்க...







உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும் | ஃபிச் ரேட்டிங்: RWN (lka) ஸ்திரமான நிலை

# மொரீஷியஸ் பிரதமர் - அமைச்சர் அலி சப்ரி சந்திப்பு!



மொரீஷியஸில் இடம்பெறும் மேற்கு இந்திய கடல்சார் பாதுகாப்பு தொடர்பான 3வது அமைச்சர்கள் மாநாட்டின் போது மொரீஷியஸ் பிரதமர் பிரவிந்த் குமார் ஜக்நாத் உடன் வெளிவிகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி எம். யூ.எம். அலி சப்ரி சிநேகபூர்வ சந்திப்பினை நேற்றுமுன்தினம் (17) மேற்கொண்டார்.

இடம்பெற்ற இச் சந்திப்பின் போது, இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய இருதரப்பு உறவுகளை மேலும் விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து கவனம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு...

**(முன் பக்கத் தொடரச்சி)**

தொண்டமானை அப்பதவியில் இருந்து நீக்கி அண்மையில் பதவி இழந்த முன்னாள் அமைச்சர் நசீர் அஹமட்டுக்கு அப்பதவியை வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதாக சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த வார இதழ் பத்திரிகையில், மாகாண ஆளுநர்கள் பலரை இடமாற்றம் செய்ய ரணில் அரசு திட்டமிட்டுள்ளது.

அதன்மூலம் அண்மையில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் பதவி இழந்த முன்னாள் அமைச்சர் நசீர் அஹமட்டு க்குக் கிழக்கு மாகாண ஆளுநர் பதவி வழங்கப்படவுள்ளது என்று நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் பதவி வகிக்கும் செந்தில் தொண்டமான் ஊவா மாகாண ஆளுநராகவும், தற்போதைய ஊவா மாகாண ஆளு நரான ஏ.ஜே.எம். முஸம்மில் மேல் மாகாண ஆளுநர் பதவிக்கும் நியமிக்கப்படவுள்ளனர்.

இந்த நியமனங்கள் மற்றும் இடமாற்றங்கள் அனைத்தையும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன என குறித்த சிங்கள வார இதழ் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாட்டை...

**(முன் பக்கத் தொடரச்சி)**

உயர் நீதிமன்றத்தின் முன் அம்பலமானார்கள் என்றும், நாட்டை வங்குரோத்தாக்கிய தரப்பினருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் புத்திஜீவுகள் பேரவையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் திறந்த பல்கலைக்கழகத்தின் மூன்று பேராசிரியர்கள் தாக்கல் செய்த மனுவை உயர்நீதிமன்றம் பரிசீலித்து மனுதாரர்களின் அடிப்படை உரிமைகள் கடந்த அரசாங்கத்தின் ஆட்சியாளர்களால் மீறப்பட்டுள்ளன என்று தீர்ப்பளித்துள்ளதாகவும்,இந்த தீர்மானத்தின் மூலம் நாட்டில் உள்ள 220 இலட்சம் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பதுவத்துகொடை ஸ்ரீசுனந்தாராம விகாரையில் நேற்று (18) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டு மக்கள் பட்டினியால் வாடும் நிலையில்,நாட்டின் தற்போதைய தலைவரும் முன்னாள் அரச தலைவரும் பெரிய கேக் வெட்டி பிறந்தநாளை கொண்டாடி வருகின்றனர் என்றும்,நாட்டு மக்களின் வாழ்க்கையை வெட்டித் தீர்த்த தலைவர்கள், தற்போதைய தலைவரின் உதவியால் சுகமான வாழ்க்கை வாழ்கிறார்கள் என்றும்,இது 2019 இல் எடுக்கப்பட்ட தவறான தீர்மானங்களின் விளைவு என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அரசியல் நண்பர்கள் ஒன்று கூடி தங்கள் குடும்பங்களின் குறைகளை நிவர்த்தி செய்து சுகபோக வாழ்க்கை வாழ்ந்தாலும், நாட்டில் 220 இலட்சம் பேர் ஒரு நாளைக்கு 3 வேளை கூட சாப்பிட முடியாத நிலையில் உள்ளனர் என்றும், நாட்டு மக்கள் படும் துன்பங்கள் குறித்து இந்த ஆட்சியாளர்களுக்கு அக்கறை இல்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்தச் சட்ட நடைமுறையால், நாட்டின் 220 இலட்சம் மக்கள், நாடு வங்குரோத்தானதால் ஏற்பட்ட இழப்பு மற்றும் சேதங்களுக்கு இழப்பீடு கோரி சட்டத்தின் முன் செல்ல வழி திறக்கப்பட்டுள்ளதாகவும், இதற்குத் தேவையான சட்ட ஆதரவை வழங்கும் வேலைத்திட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியும் முன்னெடுக்கும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்த மனு மூலம் இழப்பீடு கிடைக்காவிட்டாலும்,நாட்டிலுள்ள 220 இலட்சம் பேருக்கு இழப்பீடு கிடைக்க ஐக்கிய மக்கள் சக்திக்கு உறுதுணையாக இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழ். ...

**(முன் பக்கத் தொடரச்சி)**

பட்ட பின் படிப்பு கல்வி நிறுவனங்கள் நிறுவப்படும் என்றும், இதற்காக 60 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும் என்றும் 2023 வரவு செலவு செலவு திட்ட உரையில் நிதியமைச்சர் தெரிவித்தாலும்,இது இன்னும் நிறைவேற்றப்பட வில்லை என்றும், இது குறித்து அந்த பல்கலைக்கழக சமூகத்திடம் கேட்டறிந்ததாகவும் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் நேற்று(18) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டமூல இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் (ஐந்தாம் நாள்) கலந்து கொண்டு உரையாற்றுகையிலையே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

பின்னர்,நாடாளுமன்ற ஆய்வுப் பிரிவு சம்பந்தப்பட்ட அமைச்சிடம் இந்த முன்மொழிவின் முன்னேற்றம் குறித்து வினவியபோது,ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்படவில்லை என்றும்,இதற்கான சாத்தியக்கூறு ஆய்வை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த முன்மொழிவுகள் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்படுவதற்கு முன்னர்,இந்த முன்மொழிவுகள் குறித்து ஆய்வுகள் நடத்தப்படாமல்,தயார்படுத்தாமல் அறிக்கைகள் வெளியிடப்படுகிறதா என்ற கேள்வி தெளிவாக எழுகிறது - என்றார்.

# அஷ்-ஷெய்க் எஸ்.எல். நௌபர் மௌலவியின் தாயார் காலமானார்

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் முக்கியஸ்தரும் கல்விக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பின் பணிப்பாளருமான அஷ்-ஷெய்க் எஸ். எல். நௌபர் மௌலவியின் தாயார் பீவி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவரது ஜனாஸா நேற்று தல்கஸ்பிடிய பன்னப்புர ஜூம்ஆப்பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஜம்இய்யத்துல் உலமா பிரமுகர்கள் உட்பட பெருந்தொகையானோர் இந்த ஜனாஸாவில் கலந்து கொண்டனர்.

## சர்வதேச...

**(முன் பக்கத் தொடரச்சி)**

குற்றச் செயல்களுக்கு நாளுக்கு நாள் சர்வதேச மட்டத்தில் எதிர்பு குவிந்து வருகின்றது. தென்னாபிரிக்கா இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்ய தீர்மானித்திருப்பதாக அந்நாட்டு ஜனாதிபதி சிரில் ரம்போஸா தெரிவித்துள்ளார்.

இதேநேரம் தென்னாபிரிக்காவிலிருந்து இஸ்ரேல் தூதுவராலயத்தை மூடிவிடுவதற்கு பாராளுமன்றத்தில் பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சி இப்பிரேரணையை முழுமையாக ஆதரித்திருப்பதாக ஆளுங்கட்சி பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

## அலிசப்றி...

**(முன் பக்கத் தொடரச்சி)**

தடையுத்தரவு ஒன்றினை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் வழங்கியுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் அதி முக்கிய பிரமுகர்களுக்கான நுழைவாயில் ஊடாக தங்கம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளைக் கடத்தியதுக்காக குற்றம் சாட்டப்பட்டு அபராதம் செலுத்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரஹீமை நீக்குவதற்கு அவரை பிரதிநிதித்துவப்படுத்தும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தீர்மானம் எடுத்திருந்தது. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிக்கு களங்கம் ஏற்படுத்தியதன் காரணத்துக்காகவே அவரை கட்சியால் நீக்கப்பட்டிருக்கிறார். இது தொடர்பான விசாரணை இரு வாரங்களுக்குள் முடிவடைய வேண்டும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

## இந்தியா...

**(முன் பக்கத் தொடரச்சி)**

மாலைதீவு அதிபர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலத்தீவின் எட்டாவது அதிபராக மொஹமட் முய்ஸு (Mohamed Muizzu) வெள்ளிக்கிழமை பதவியேற்ற பிறகு, நேற்று (நவ.18), தீவில் இருந்து இந்தியா தனது இராணுவ படைகளை திரும்பப் பெறுமாறு அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக கேட்டுக் கொண்டதாக அறிவித்தார்.

இதையடுத்து, இரு நாடுகளும் "செயல்படக்கூடிய தீர்வை" காண முயற்சிக்கும் என்று இந்திய தரப்பு தெரிவித்துள்ளது.

இந்திய புவி அறிவியல் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜுவை ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று சந்தித்தபோது ஜனாதிபதி முகமது முய்சு முறைப்படி கோரிக்கை விடுத்தார்.

45 வயதான முய்சு, சீன சார்பு அரசியல்வாதியாகக் கருதப்படுகிறார், மாலத்தீவின் எட்டாவது ஜனாதிபதி ஆவார்.

முய்ஸு அதிபராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு, இந்திய இராணுவத்தின் இருப்பை விரைவில் அகற்றுவதே தனது முதன்மையான முன்னுரிமை என்று கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## முக்கிய...

**(முன் பக்கத் தொடரச்சி)**

செய்யப்பட்டுள்ளனர்.

எங்களுக்கு முன்னாள் உள்ள மிக முக்கியமான கேள்வி ஏன் இஸ்ரேலிய இராணுவம் பொதுமக்களை

இவ்வாறு கொலை செய்கிறது. மிக முக்கியமாக இதற்குப் பிரதான காரணமாக கடந்த 40

நாட்களுக்கும் மேலாக இடம்பெற்றுவரும் இந்தப் போரில் இதுவரை இஸ்ரேலிய இராணுவத்தால்

எந்தவிதமான இராணுவ ரீதியிலான முன்னேற்றத்தையும் அடையமுடியவில்லை. அவர்கள் இதுவரை ஓர்

இடத்தில் தரித்து நிற்கமுடியாத நிலையில் காணப்படுகின்றனர். எந்த நேரமும் சுற்றிவளைத்து

ஹமாஸ் அமைப்பின் அல்-கஸ்ஸாப் படை தொடர்ந்து தாக்குதல் நடத்துவதோடு, ஏனைய பலஸ்தீனப்

தரப்புக்களும் அல்-இஸ்லாமீ ஜிஹாத், அல்குத்தூஸ் போன்ற படைப்பிரிவுகள் தொடர்ந்து

இஸ்ரேலியப் இலக்குகளை மிகவும் தொடராகத் தாக்கி வருகின்றனர். இவ்வாறு இராணுவ இலக்குகளால் சமநிலையில்

இருந்த இஸ்ரேல் பலஸ்தீன மக்களுக்கு நீங்கள் எங்களுடன் போராடினால் இவ்வளவு பெரிய

அழிவைச் சந்திக்க வேண்டி வரும் என்ற செய்தியை சொல்வதற்காகவேண்டியே இந்தத் தாக்குதல்களை

நடத்துவதாக நம்பப்படுகின்றது.

இதேநேரம் நேற்று ஜேர்மனிக்கு விஜயம் செய்த துருக்கி அதிபர்

எர்தூக்கான் முக்கியமான செய்தியை சொல்கின்றார்.

அவர் ஜெர்மனியிடம் துருக்கி அரசு இராணுவ விமானங்களை கொள்வனவு செய்வதற்கு

கேட்டிருந்தார். ஜேர்மனி அதனை மறுத்ததையடுத்து மிகவும் காரசாரமாகச் சொன்னார். நாங்கள்

இஸ்ரேலுக்கு ஒரு சதம் கூட கடனில்லை. எங்களுக்கு பேசுவதற்கும் கதைப்பதற்கும் உரிமை

இருக்கின்றது. நாங்கள் யூதர்களை படுகொலை செய்யவுமில்லை. நாங்கள் மிகவும் துணிவோடு

சொல்கின்றோம். இஸ்ரேல் சட்ட ரீதியற்ற ஒரு பயங்கரமான நாடு என்று

குறிப்பிட்டிருக்கின்றமை உலகளாவிய ரீதியில் பேசுபொருளாக மாறியிருக்கின்றது.

குறிப்பாக, இந்த நிலைமையைக் கவனத்திற் கொள்கின்ற போது ஜோர்தானிய யுத்தத் தாங்கிகள்

இப்போது இஸ்ரேல் மேற்குக் கரை எல்லையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, பிரதானமாக ஜெனீன் நகரம், நப்லூஸ் நகரம் போன்ற நகரங்களில் கடந்த இரு தினங்களாக இஸ்ரேலிய இராணுவத்தை துரத்தியடிக்கும் அளவுக்கு மிகப் பயங்கரமான எதிர்ப்பை நடத்துகின்றன. இதன் விளைவாக இஸ்ரேல் விமானத் தாக்குதலைக் கூட ஜெனீன் நகரில் நடத்தியிருக்கின்றது. இஸ்ரேலைப்

பொருத்தமட்டில் இப்போது காஸாவைப் போன்றே மேற்குக் கரையிலும் போராட்டம் வெடிப்பது

உறுதியாகிவிட்டது. இதனால் இஸ்ரேலுக்கு மிகப் பயங்கரமானதொரு நிலை ஏற்படுமென்று இஸ்ரேலுக்குத் தெரியும்.

குறிப்பாக, இஸ்ரேல் சற்றும் எதிர்பாராத விதமாக காஸாவிலும் ஹமாஸினுடைய

அல்கஸ்ஸாம் படைப்பிரிவு வேரூன்றியிருப்பது கண்டறியப்பட்டிருக்கின்றது.

உண்மையில் இஸ்ரேல்

இதனை எதிர்பார்த்திருக்கவில்லை. இஸ்ரேல் நினைத்துக் கொண்டிருந்தது முழுக்க முழுக்க இது

பத்தாஹ்வினுடைய கட்டுப்பாட்டில் இருக்கினற்து. பத்தாஹ் ஹமாஸை வளரவிடாது என்று. ஆனால் ஹமாஸ்பத்தாஹ்வினுடைய கண்ணிலும் மண்ணைத் தூவிவிட்டு அண்ட க்ரவுன்டிலும் மிகக் கவனமாக தங்களுடைய நிலைகளை

இஸ்திரப்படுத்தி ஒழுங்குபடுத்தப்பட்ட இராணுவமாக இஸ்ரேல் இராணுவத்தை எதிர்ப்பதைக் காணமுடிகிறது.

காஸாவைப் போன்றே கனரக ஆயுதங்கள் இல்லாவிட்டாலும் கூட துப்பாக்கிச் சண்டைகள் மற்றும்உள்ளூரில் தயாரிக்கப்பட்ட குண்டுகள் போன்றவற்றால் இஸ்ரேலிய இராணுவத்தை தாக்கிவருகின்றனர்.

இதனால் இஸ்ரேலியஅரசாங்கம் மிகவும் சிக்கலானநிலைமையைக்கண்டுகொண்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்.றன.

இதேவேளை லெபனானிலிருந்து ஹிஸ்புல்லாக்கள் ஒவ்வொரு நாளும் தங்களுடைய தாக்குதல் நடவடிக்கைகளைபடிப்படியாக இஸ்ரேல் இராணுவத்தின் பல இராணுவ இலக்குளை தாக்கி வருகின்றன. இதன் காரணமாகஇஸ்ரேல் இராணுவம் பல முனைகளில் போரை எதிர்கொண்டிருக்கின்ற நிலைமையில் இஸ்ரேலினுடையஉள்நாட்டு மக்கள் இதுவரை தங்களுடைய பணயக் கைதிகளை விடுவிக்காமையும்ரூபவ் பல பணயக் கைதிகள்இஸ்ரேலினுடைய விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ளதன் விளைவாக அவர்கள் சமநிலையைஇழந்து இஸ்லேினுடைய உள்நாட்டுக் குழப்பமொன்று ஏற்பட்டிருக்கின்றது. குறிப்பாக

இஸ்ரேலிய பிரதமரை பதவி விலக வேண்டுமென்ற கோரிக்கை வலுவடைந்து வருகின்றது. எந்தவிமான

திட்டமிடலும் இல்லாததால் கொத்துக் கொத்தாக இஸ்ரேலிய இராணுவம் காஸாவில் மடிவதை ஹமாஸ்வீடியோ எடுத்து வெளியிடுகின்ற நிலையில்ரூபவ் அது இஸ்ரேலிய சமூகத்திற்கு பலத்தஏமாற்றத்தையும்ரூபவ் அதேபோல் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இதேநேரம்அமெரிக்காரூபவ் பிரான்ஸ் போன்ற நாடுகள் தொடர்ந்தும் இஸ்ரேலுக்கு ஆதரவை வழங்கிவருவதோடுஹூத்திகளும் தங்களது தாக்குதல்களை அதிகரித்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. இன்னொரு பக்கம்அமெரிக்காவினுடைய நிலைகள் தொடராக ரூடவ்ராக்கிலும்ரூபவ் சிரியாவிலும் தொடர்ந்தும் தாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அண்மையில் அந்தத் தாக்குதல்களை நடத்தும் அமைப்பு

வெளியிட்டிருக்கின்ற அறிக்கையில் நாங்கள் அமெரிக்காவை மத்திய கிழக்கிலிருந்துதுரத்தியடிப்போம் என்று சூலுரைத்திருக்கின்றது.

இதேநேரம் அரபு நாடுகள் தங்களது நிலைப்பாடுகளில் எந்த மாற்றத்தையும் காட்டியதாகத் தெரியவில்லை. சுவூதி

அரேபியா, யூஏஈ, எகிப்து போன்ற நாடுகள் தொடர்ந்தும் இஸ்ரேலை மறைமுகமாகவும்

நேரடியாகவும் ஆதரிக்கும் நிலையில் காணப்படுகின்றன. இதற்கு மிக முக்கியமான காரணமாககுறிப்பாக, இஸ்ரேல் யூ.ஏ.இல். பெருமளவில் முதலீடு செய்திருப்பதாக நம்பப்படுகின்றது.

சில ஆய்வாளர்களின் கருத்துப் படி சவூதியினுடைய நியோன் சிட்டி அல்லது சோலாபவர் இன்டோலேசன்களில் பெரும்பாலான தொகையை இஸ்ரேல் முதலீடு செய்திருப்பதாகஅங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால், இதுவரை சவூதி அரேபியா இதுவரை இதனைஉறுதிப்படுத்தவில்லை. இதேநேரம் சவூதியினுடைய பொதுமக்களினுடைய அபிப்பிராயம்படிப்படியாக பலஸ்தீனுக்கு சார்பாக மாறி வருவதன் காரணமாக அங்கு காணப்படக்கூடியஅரசாங்கத்துக்கு சார்பான உலமாக்களும் மிகவும் கவனமாக வார்த்தைகளை பிரயோகிக்கின்றநிலைமை காணப்படுகின்றது.

இஸ்ரேலைப் பொருத்தமட்டில் தொடராக சமநிலை இழந்து இவ்வாறு படுகொலை செய்வதானது அவர்களுடைய உண்மையான முகத்தை உலகத்துக்குத் தெரியப்படுத்தி இருப்பதோடு, அவர்களுடைய மொத்த இருப்புக்கான

கௌரவத்தையும் இல்லாமல் செய்திருக்கின்றது. பல இஸ்ரேலியர்கள் தங்களால் பாதையில் நடந்து

செல்ல முடியாது தங்களை அனைவரும் குழந்தைகளைக் கொலை செய்யும் ஒரு சமூகமாகவே பார்க்கின்றனர்.

எங்களுடைய மொத்த கௌரவத்தையும் இந்த இஸ்ரேல் இராணுவத்தினுடைய நிலைமை உருவாக்கியிருப்பதாக குறிப்பிடுகின்றது. இதனால் இஸ்ரேலுக்கு இருந்த இராணுவ ரீதியிலான பிம்பமும்

அதேபோன்று இஸ்ரேலினுடைய குறிப்பாக, இந்த மனிதாபிமானமற்ற செயற்பாடுகளின் காரணமாகவும் மொத்த உலகிலும் இஸ்ரேல் தொடர்பான ஒரு பிழையான என்பதை விட சரியான முகம் வெளியாகியிருக்கின்றது. இதனால் இஸ்ரேலிய அரசு தொடர்ந்து நிலைத்திருப்பதற்கான வாய்ப்பும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டேதான் வருகின்றது.

ஏனெனில், இரண்டாம் உலக மகாயுத்தத்தில் இவ்வாறு தான் ஹிட்லர் பலரை எந்தவிதமான சர்வதேச சமூகத்தையும் மதிக்காது பலரைக் கொலை செய்ததன் விளைவாகத்தான் ஜேர்மனியிலிருந்து அவரது அரசை அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டு மிகப் பெரியதொரு போராட்டத்தை நோக்கிச் சென்றதைகாணக்கூடியதாக இருக்கின்து.

இதேவேளை வ வோல் ஸ்ரிட் ஜேர்னல் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஹமாஸ் படிப்படியாக

பிராந்தியத்தில் யுத்தத்தை உருவாக்கும் நோக்கத்தோடு தொழிற்படுவதாக தெரிவித்துள்ளதோடு, அதற்கான சில உளவு அறிக்கைகளையும் வெளியிட்டிருக்கின்றது. இது எப்படிப் போனாலும் இந்தப்

போர் மிகத் தெளிவாக மிகவும் அமைதியானது போல் காணப்பட்டாலும் பல நாடுகள் மக்கள்

மத்தியில் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியிருப்பதோடு, காஸாவுக்கு சார்பாக நடக்கும் பாரிய

ஆர்ப்பாட்டங்களும் மத்திய கிழக்கு மக்களுடைய கொந்தளிப்பு நிலையும் ஒரு விடயத்தை தெளிவாகச் சொல்கின்றுது. இந்தப் போர் படிப்படியாக பிராந்திய போராக மாறி வருவதாக அரசியல்

ஆய்வாளர்களும் இராணுவ ஆய்வாளர்களும் குறிப்பிடுகின்றனர்.

**அரங்கம்**

# நாமல் யாருடையதோ கயிற்றை விழுங்கியிருக்கின்றார் என்கிறார் மகிந்த

நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைக்கு ராஜபக்ஷ குடும்பம் மற்றும் நிதி அமைச்சு அதிகாரிகளே காரணம் என உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு, 2024 ஆம் நிதி ஆண்டுக்காக வரவு, செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டமை, தொடரும் கிரிக்கெட் நெருக்கடி, கோப் கமிட்டியின் தலைவர் கோப் கமிட்டி கூட்டத்தில் சைகை காட்டிய பிரச்சினை, புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்றி ரஹீமை பதவி நீக்குவது தொடர்பான விவகாரம் என்பன காரணமாக இவ்வார அரசியல் களம் சூடானதாகவே இருந்தது.

நிதியமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திங்களன்று உச்சி நேரமான 12 மணிக்கு வரவு, செலவு திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சராகச் சமர்ப்பிக்கப்படும் இரண்டாவது பட்ஜெட் இதுவாகும்.

பட்ஜெட் ஒன்றைச் சமர்ப்பிக்கும் போது விலைவாசிகள் உயருமா குறைவுமா என்ற எதிர்பார்ப்புக்கு முற்றுப்புள்ளி வைத்த நிதி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் 78ஆவது பட்ஜெட்டினை கொள்கைப் பிரகடனமாகவே நிகழ்த்தினார்.

திங்கட்கிழமை காலையே இவ்வாறு அமைச்சரவைக் கூட்டம் இடம்பெற்றது.

அமைச்சரவைக் கூட்டம் அங்கீகரிக்கப்படுவது பட்ஜெட்டுக்கு அங்கீகாரம் பெறுவதற்காகும்.

வரவு, செலவுத்திட்ட பிரேரனைகள் உட்பட அஸ்வெஸ/ம பற்றியும் இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலக பணிக்குழாமின் பிரதானி சாகல ரத்நாயக அஸ்வெசும திட்டம் பற்றி அமைச்சர்களுக்கு விளக்கமளித்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்திற்குச் சென்றாலும் தண்ணீர் ஒரு கிளாஸ் கூட அருந்த மாட்டேன் எனக் கூறியிருந்த விளையாட்டு துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவும் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார்.

கிரிக்கெட் சர்ச்சை தொடர்பாக ரொஷான் ரணசிங்க பிரச்சனைக்குரியவராக மாறியிருக்கிறார். அமைச்சரவை கூட்டம் முடிந்து ரொஷான் அமைச்சர் காஞ்சனாவுக்கு அருகில் செல்லும்போது இங்கு தண்ணீர் அருந்தப் பயம் என்றால் எனது தண்ணீரை அருந்துங்கள் எனக் கூறிய போதும். அதை செவிமடுக்காதது போன்று ரொஷான் கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

ஜனாதிபதி கிரிக்கெட் தொடர்பான பிரச்னைகளை தான் நியமித்த அலிசப்றி தலைமையிலான குழுவுக்கு முன்னெடுத்துச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார். அமைச்சரவைக் கூட்டம் முடிந்த பிறகு அலிசப்றிக்கு தன்னைச் சந்திக்குமாறு ஜனாதிபதி கேட்டுக் கொண்டார். ஜனாதிபதி அதன்படி சப்றியையும் அழைத்துக் கொண்டு தனது அலுவலகத்துக்குச் சென்றார்.

கிரிக்கெட் தடைபற்றிப் பேசுவதற்கு கிரிக்கெட் சபைத் தலைவரை மாலை ஜனாதிபதி அலுவலகத்துக்கு அழையுங்கள். அவருடனும் பேசிவிட்டு நடந்தது என்ன என்று எனக்கு கூறுங்கள் என்று சப்றிக்கு ஜனாதிபதி பணிப்புறை விடுத்தார்.

அன்று மாலை கிரிக்கெட் சபையின் தலைவர் சம்மித சில்வா அலுவலகத்திற்கு வந்து சப்றி அமைச்சருடன் கலந்துரையாடியுள்ளார்.

வரவு, செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்காகமுற்பகல் 11:30 மணியளவில் பாராளுமன்றத்துக்கு சென்ற ஜனாதிபதிக்கு சபை முதல்வர் சுசில் பிரேம் ஜயந்த உள்ளடங்கிய அரசு தரப்பு முக்கியஸ்தர்களும் பாராளுமன்ற உத்தியோகத்தர்களும் வரவேற்றனர். பாராளுமன்றத்தில் ஜனாதிபதி அலுவலகத்திற்கு ஜனாதிபதி செல்லும்போது அங்கு அரசு தரப்பு எம்.பி.க்கள் கூடி இருந்தனர். அங்கிருந்த சுற்றுலா ராஜாங்க அமைச்சர் டயானா கமகேயை விழித்த ஜனாதிபதி, உங்களுக்குத் தேவையான டூரிஸ்ட் எகோனமிக்கை பட்ஜெட்டில் உள்ளடக்கி இருக்கின்றேன் என்று கூறினார். அதனைக் கேட்ட எல்லோரும் போன்று அங்கு வாய் விட்டுச் சிரித்தனர்.

ஜனாதிபதி பட்ஜெட் உரை அடங்கிய இரகசியப் பெட்டியை எடுத்துக் கொண்டு சபைக்குள் பிரவேசித்தபோது இரு தரப்பிலும் மேசை மேல் தட்டினர். ஜனாதிபதியின் உரை இரு மணி நேரத்திற்கு மட்டுப்படுத்தப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

வழமையாக மாலை நேரத்திலே பட்ஜெட் உரை இடம்பெறும். சந்தைகள் மூடப்பட்ட பின்பே பட்ஜெட் உரையின் இரண்டாம் பகுதி வாசிக்கப்படும். இம்முறை நண்பகல் 12 மணிக்கே பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டது. நிதியமைச்சரின் தேநீர் விருந்துபச்சாரத்திற்குப் பதிலாக பகற்போசண விருந்துபசாரமே வழங்கப்பட்டது. ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேசையிலே அமர்ந்து உணவருந்தினர். ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.க்களான ஹர்ஷ டி சில்வா, எஸ்.எம்.மரிக்கார், எரான் விக்கிரமரத், தமிழர் கூட்டமைப்பின் எம்.பி. சுமந்திரன், ஆகியோர் இந்த விருந்துபசாரத்தில் கலந்து கொண்டனர்.

செவ்வாய்க்கிழமை என்று பட்ஜெட் மீதான இரண்டாவது வாசிப்பு விவாதம்

ஆரம்பமானது. ஜனாதிபதி இத்தினத்தன்றும் பாராளுமன்றம் வந்து எதிர்க் கட்சி லொபியிலும் அரசாங்க லொபியிலும் அதிக நேரம் தங்கி எம்.பி.க்களுடன் உரையாடினார். அரச தரப்பு லொபியிலிருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட எம்.பிக்களுடன் அதிக நேரம் ஜனாதிபதி உரையாடினார்

அங்கிருந்த மஹிந்த ராஜபக்ஷவை விழித்த பாராளுமன்ற உறுப்பினர் விஜிர அபேவர்தன, நீங்களும் பட்ஜெட்டுக்கு ஆதரவு வழங்குவீர்கள். ஆனால், நாமல் பட்ஜெட்டுக்கு ஏசுகிறாரே என்று கூறினார். அதற்குப் பதிலளித்த மஹிந்த ராஜபக்ஷ, அவர் யாருடையாவது கைற்றை விளங்கியிருப்பார் என்று மறுபக்கத்தில் பார்த்துக் கொண்டே கூறியுள்ளார்.

செவ்வாயன்று மாலை ஜனாதிபதி ஊடகப் பிரதானிகளைச் சந்தித்தார். பட்ஜெட் பற்றி மட்டுமன்றி கிரிக்கெட் பற்றியும் ஊடகப் பிரதானிகள் கேள்வி எழுப்பினர்.

நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவது போன்று கிரிக்கெட் விளையாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதாக ஊடகப் பிரதானிகளுக்கு ஜனாதிபதி கூறினார்.

வியாழன்று மாலைதீவு புதிய ஜனாதிபதி முஹம்மட் முஃஸீன் பதவிப்பிரமாண வைபவத்தில் கலந்து கொள்வதற்காக மாலைதீவுக்குப் பயணமானார். வெள்ளியன்று இடம்பெற்ற இந்நிகழ்ச்சியில் பங்கு பற்றிய ஜனாதிபதி, சனியன்று நாடு திரும்பினார்.

ஜும்ஆ நேரத்தில் கோப் கூட்டமா?

கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார பாராளுமன்றத்தில் இரு சர்ச்சைக்குள் சிக்கியதனால், கோப் குழுவின் கூட்டங்களை மறு அறிவித்தல் வரை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இடைநிறுத்தி யுள்ளார். கோப் குழு கூட்டத்தில் அதன் தலைவர் பலமுறை அரச தரப்பு எம்.பி.க்களுக்கு சைகை காட்டியதாகவும் தலைவர் ரஞ்சித் பண்டார மீது குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளது. கோப் தவிசாளர் ரஞ்சித் பண்டார ஜ/ம்மா தொழுகை நேரத்தில் அவசர கூட்டமொன்றைக் கூட்டியிருந்தார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இக்கூட்டம் கூட்டப்பட்ட நேரம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவித்தார்.

முஸ்லிம் உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், எஸ்.எம்.மரிக்கார் ஆகியோர் ஜ/ம்ஆவுக்குப் போகும் நேரத்தில் கூட்டம் கூட்டப்பட்டுள்ளதால் அனைவரும் கலந்து கொள்ள முடியாமல் இருப்பதாக சஜித் சபையில் சுட்டிக் காட்டினார். அதற்குப் பதிலளித்த சபாநாயகர் மறு அறிவித்தல் வரை கோப் குழு கூட்டங்களை இடை நிறுத்துவதாக அறிவித்தார்.

இது குறித்து கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சித் தரப்பு பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்ட சமய நிகழ்ச்சி முடிந்த பின் கூட்டத்தைக் கூட்ட முடியும் என்று கூறியதுக்கு பதிலளித்த சபாநாயகர் உருவாகியுள்ள நெருக்கடி நிலை நீங்கிய பின் கோப் கூட்டம் நடைபெறும் என அறிவித்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் முஸ்லிம் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட அலி சப்றி ரஹீம் வெற்றி பெற்றார். இவரது தெரிவின் மூலம் நீதியமைச்சராக இருந்த மர்ஹூம் நெய்னா மரிக்கார் தெரிவான பின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரே பிரதிநிதியாக இவர் இருக்கிறார். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டுத் தெரிவான அலி சப்றி ரஹீம், சில மாதங்களின் பின்பே அரச தரப்பு எம்.பி.யாக மாறினார். புத்தளம் வனாத்தவில்லு, கற்பிட்டி அபிவிருத்தி குழுவின் தலைவராகவும் இவர் நியமனம் பெற்றிருந்தார். வெளிநாட்டு விஜயமொன்றின் போது சட்டவிரோதமாக தங்கம் மற்றும் பெருந்தொகையான கையடக்கத் தொலைபேசிகளைக் கொண்டு வந்ததற்காக குற்றம் சாட்டப்பட்டு அபராதமும் விதிக்கப்பட்டார். பகிரங்கமாக இத்தவறைச் செய்த ஒருவர் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினராக இருப்பது பற்றி பாராளுமன்றத்தில் சகல கட்சித் தரப்பினரும் எதிர்ப்புக்களைத் தெரிவித்தனர். இவர் போட்டியிட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸிலிருந்து இவர் சில வாரங்களுக்கு முன்பு நீக்கப்பட்டார். இவ்வாறு நீக்கப்பட்டாலும் இவரைப் பாராளுமன்ற உறுப்பினரிலிருந்து நீக்கும் அதிகாரம் இவர் போட்யிட்ட முஸ்லிம் தேசிய கூட்டமைப்புக்கே இருக்கின்றது. முஸ்லிம் தேசிய கூட்டமைப்பின் செயலாளராக மத்திய மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் முன்னாள் உறுப்பினர் நயீமுல்லாஹ் இருக்கிறார்.

அலி சப்றி ரஹீம் எம்.பி.யாக இருப்பது பற்றி முஸ்லிம் தேசிய கூட்டமைப்பின் செயலாளர் நயீமுல்லாஹ்வே முடிவெடுக்க வேண்டும். தேர்தலுக்கு முன் காணப்பட்ட கணவான ஒப்பந்தம் போட்டியிடும் கட்சி சார்பில் அபேட்சகர்கள் பற்றி அக்கட்சி எடுக்கும் முடிவினை மதிக்கவேண்டும் என்பதாகும். கணவான ஒப்பந்தத்தை அமுல்படுத்துமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் முஸ்லிம் காங்கிரஸிடம் கோரிக்கை விடுத்துள்ளது. கட்சித் தலைவர் றிஷாத் பதியுதீன் தலைமையில் பத்திரிகை மாநாடு ஒன்று நடாத்தி முஸ்லிம் காங்கிரஸ் இது பற்றி தீர்மானம் எடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். மக்கள் காங்கிரஸ் கட்சி உயர்பீடம் 15ஆம் திகதி இடம்பெற்ற பின் கட்சித் தூதுக்குழு ஒன்று நயீமுல்லாஹ்வை சந்திப்பதற்கு அவரது வீட்டுக்குச் சென்ற போது நயீமுல்லாஹ் அங்கு இருக்கவில்லை எனக் கூறப்படுகின்றது. இந்தவகையில் முஸ்லிம் காங்கிரஸ/க்கும் மக்கள் காங்கிரஸ/க்கும் இடையே இப்போது இவ்விவகாரம் ஒரு சர்ச்சையை ஏற்படுத்தும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அகில மக்கள் காங்கிரஸின் உயர் பீடம் கடந்த 15ஆம் திகதி கூடி இது பற்றி மீண்டும் ஆராய்ததது. அதனை அடுத்தே கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்று நடாத்தி முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்கு இந்த விடயத்தில் நீதி நியாயப்படி நடந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டது. கட்சி உயர்பீடத்தினர் 15ஆம் திகதி இரவு இடம்பெற்ற கூட்டத்திற்குப் பிறகு நயீமுல்லாவைச் சந்திப்பதற்குச் சென்றபோதும் அவர்களால் நயீமுல்லாஹ்வை சந்திக்க முடியவில்லை.

- நஸ்மின் -









www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2023 NOVEMBER 19 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# துன்புறுத்தப்பட்ட ரம்ஸி ராஸிக் இற்கு உயர் நீதிமன்றம் அளித்த நிவாரணம்

கடந்த வாரம் நாட்டில் நீதி நிலைநாட்டப்படும் என எதிர்பார்த்திருந்த மக்களுக்கு திருப்தி அளிக்கும் ஒரு வாரமாக அமைந்திருந்தது. மக்கள் உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் மூன்று தீர்மானங்களை உயர் நீதிமன்றம் வழங்கியிருந்தது. உயர்நீதிமன்றம் வழங்கிய முக்கிய தீர்ப்புகளில் ஒன்று 2019 ஆம் ஆண்டு முதல் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிக்கு அக்காலகட்டத்தில் பதவியிலிருந்த ஜனாதிபதி, நிதியமைச்சர்கள், நிதியமைச்சு மற்றும் திறைசேரிக்குப் பொறுப்பாகவிருந்த உயரதிகாரிகள் பொறுப்புக் கூறவேண்டுமென்று அளித்த தீர்ப்பாகும்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ, முன்னாள் நிதியமைச்சர்களான மஹிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ உட்பட நிதியமைச்சில் பணிபுரிந்த தீர்மானமெடுக்கும் அதிகாரிகள் பொறுப்பு என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இது ஒரு வரலாற்று முக்கியத்துவம்மிக்க தீர்ப்பாகும்.

பொருளாதாரம் வீழ்ச்சியடைவதற்கும், அதன் மூலம் நாட்டில் இரண்டு கோடி மக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படப் போவதனை தெரிந்து தெரிந்தும், அது தொடர்பாக அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தும் அதனை எதிர்கொள்வதற்கு உரிய தீர்மானங்களை எடுக்காது அது தொடர்பாக தவறான தீர்மானங்களை எடுத்து நாட்டில் மக்களை பெரும் துயரத்துக்கு உள்ளாக்கி ஒரு சிறு பிரிவினரின் நன்மைக்காக தீர்மானங்களை எடுத்ததின் மூலம் நாட்டு மக்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது. இந்த தவறான தீர்ப்பு காரணமாக நாட்டு மக்கள் இன்று வரை எதிர்கொண்டு வரும் அசௌகரியங்களுக்கு நாட்டு மக்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படவேண்டும். இது தொடர்பாக அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் பொறுப்புக்கூற வேண்டுமென்பதனை வலியுறுத்தி இந்தத் தீர்மானம் அமைந்துள்ளது. இதனாலேயே இந்தத் தீர்மானம் வரலாற்று முக்கியத்துவமிக்கதாக அமைந்துள்ளது. இத்தீர்ப்பினை அடிப்படையாக வைத்து சம்பந்தப்பட்டவர்களது பிரஜாவுரிமை பறிக்கப்படவேண்டுமென எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இவ்வாரம் அளிக்கப்பட்ட மற்றொரு முக்கிய தீர்ப்பு சமூக செயற்பாட்டாளர் ரம்சி ராஸ ிக் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டது சட்டவிரோதமானது என்பதாகும். அது அடிப்படை உரிமைகளை மீறும் நடவடிக்கை என்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

சமூக செயற்பாட்டாளர் ரம்சி ராஸிக் தனது முகநூலில் தெரிவித்திருந்த ஒரு கருத்துக்காக அவரை கைது செய்து தடுத்து வைத்தது. 2020 ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதி தனது முகநூலில் ரம்சி ராஸிக் அக்காலத்தில் நாட்டில் நிலவிய முஸ்லிம்களுக்கெதிரான இனவாத நடவடிக்கைகளுக்கு முஸ்லிம்கள் சிந்தனா ரீதியிலான சிந்தனை போராட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென அழைப்பு விடுத்திருந்தார். இந்த முகநூல் பதிவின் பின்னர் ரம்சி ராஸிக்குக்கு மிரட்டல்களும், அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டன. ரம்சி தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிட்டார். இந்த அச்சுறுத்தல் குறித்து நடவடிக்கை எடுக்காத பொலிஸார், ரம்சியை கைது செய்து ஐந்து மாத காலமாக தடுத்து வைத்திருந்தனர். ரம்சி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த காலத்தில் பெரும் துன்புறுத்தல்களுக்கு முகங்கொடுத்திருந்தார்.

ரம்சி தனது முகநூலில் செய்திருந்த பதிவுக்கு தவறான அர்த்தம் கொடுத்து அவரை கைது செய்து தடுத்து வைத்ததன் மூலம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தவறிழைத்துள்ளார்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதோடு, பொலிஸ் உத்தியோகத்தர்கள் ரம்சி ராஸ ிக்குக்கு 30 ஆயிரம் ரூபா விதம் நஷ்டஈடு வழங்கவேண்டுமென்றும், அரசு 10 இலட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கவேண்டுமென்றும் தீர்ப்பளித்தது. இந்த வழக்கின் தீர்ப்பினை வழங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர் லசந்த கோத்தாகொட, இத்தீர்ப்பினை நாட்டின் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பி பொலிஸ் உத்தியோகத்தர்களை அறிவூட்டுமாறு பொலிஸ் மா அதிபரைக் கேட்டுள்ளார். பொலிஸ் உத்தியோகத்தர்கள் இத்தீர்ப்பு மூலம் பாடம் படிப்பது அவசியமாகும். எவரையேனும் திருப்திப்படுத்துவதற்காக சட்டவிரோதமாக விடுக்கப்படும் கோரிக்கைகளுக்கு செவிமடுத்து செயற்படுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். அந்த வகையில் இந்தத் தீர்ப்பு மிக முக்கியமானது.

இத்தீர்ப்பானது ஒரு பக்கத்தில் கருத்துச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் ஒரு தீர்ப்பாகும். மற்றது சட்டத்தை துஷ்பிரயோகம் செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர்களை கைது செய்தல், தடுத்து வைத்தல், சிறைப்படுத்துதல், சிறைப்படுத்துல் போன்ற கோரிக்கைகளுக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பாகும். டயடிகல் தொடர்பாக அரசு கொண்டுவர இருந்த சட்டம் முழுமையாக முரணானது எனவும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இவ்வாறு அளிக்கப்பட்டுள்ள தீர்ப்புகள் இந்த நாட்டில் கருத்துச் சுதந்திரத்துக்கு உத்தரவாதமாகும்.

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்) "உதயம்" இன்றிலிருந்து வாசகர்கள் மத்தியில் வலம்வரவுள்ளது. இப் பத்திரிகைக்கு தங்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும் இலவசமாக பார்வையிடலாம்...

அத்துடன், உங்களது பிரதேசங்களில் இடம்பெறும் செய்திகளையும் எமது மின்னஞ்சல் ஊடாக எமக்கு அனுப்பி வைக்க முடியும்.

editor.uthayam@gmail.com

# கைமாறிய அதிகாரத்தில் கையோங்க முனையும் கச்சிதம்!



சுஜப் எம்.காசிம்

மொண்டஸ்கியுவின் வலுவேறாக்கம் அரசியலுக்கு அவசியப்படும் விதங்கள் வெளிப்பட்டு வருகின்றன. நீதித்துறை, நிறைவேற்றுத்துறை மற்றும் சட்டத் துறைகளுக்கிடையிலான அதிகாரப்பகிர்வுகள் ஒரு ஆட்சியில் ஜனநாயகம் நிலைப்பதில் இதைப்புரியலாம். 1994இல் ஊழலை ஒழிப்பதாக வெற்றியீட்டிய சந்திரிக்கா, 2005இல் பயங்கரவாதத்தை முடிப்பதாகக் கூறி வென்ற மஹிந்த, 2015இல் குடும்ப ஏகாதிபத்தியத்துக்கு முடிவுகட்டுவதாக ஆட்சிக்கு வந்த மைத்திரி மற்றும் 2019இல் நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்துவதாக ஜனாதிபதியான கோட்டாபய ஆகியோரே நீதித்துறையால் தீர்ப்பளிக்கப்பட்டனர். மக்களாணைக்கு முரணான இவர்களின் செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டதும் மக்கள்தான். உயிரிழப்பு, மன உளைச்சல், சொத்துச் சேதம், வறுமை மற்றும் பாதுகாப்பின்மை என பல வகையில் நிலைமைகள் தலைகீழாகின்றன. மக்களாணை மதிக்கப்படாவிடின் நிலைமைகள் மறுதலையாகுமென்பதற்கு இதுபோன்ற பல சம்பவங்கள் சாட்சி.

இப்போது, நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமானவர்களென தீர்ப்பளிக்கப்பட்ட பிரபலங்களின் எதிர்கால அரசியல் எங்கே பயணிக்கும்? சொத்துக்காப்புச் சட்டத்தின் கீழ், சகோதரக் கோஷ்டியை சட்டத்தின் பிடிக்குள் தள்ளும் முயற்சிகள் முடுக்கிவிடப்படலாமென்ற ஆரூடங்களுக்கு மத்தியிலும், கட்சியின் பலத்தில் இச்சகோதரர்கள் நம்பிக்கையுடனே உள்ளனர். இந்நிலையில், பட்ஜெட்டை











பங்களிக்கிறது. இம்மூன்று துறைகளுக்கிடையில் மோதல்கள் நிலவும் காலங்களில் இதைக் காணலாம். சட்டத்தை இயற்றும் பாராளுமன்றம், நீதிவழங்கும் நீதிமன்றம் இன்னும் அரச இயந்திரத்தை இயக்கும் நிறைவேற்றுத்துறை என்பவற்றின் செயற்பாடுகளைத்தான் வலுவேறாக்கம் என வகைப்படுத்தியுள்ளார் மொண்டஸ்கிவ்.

ஐரோப்பாவில் வாழ்ந்த இவரின் அரசியல் சிந்தனைகள், இன்றைய நவீனகால அரசியலுக்கும் பொருந்துகிறது. மக்களாணையை மீறிச்செயற்படாத வகையில் அரசியல்வாதிகள் செயற்படுவதற்கு மொண்டஸ்கிவ் மூக்கணாங்கயிறு கட்டியுள்ள விதமே விந்தைதான். பெரும்பாலும் பிரதமரை தலைமையாகக் கொண்ட ஆட்சிமுறையிலேயே இந்த வலுவேறாக்கம் புரியப்படுகிறது. நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சியில், இதன் வகிபாகம் புலப்படாமல் பணியாற்றுகிறது.

நமது நாட்டில் நான்கு ஜனாதிபதிகளுக்கு எதிராக நீதித்துறை தீர்ப்பளித்திருப்பதில், விரிகின்றன இந்தப் பாதிப்புக்கள்.

ஈஸ்டர் தாக்குதலால் அந்நியச் செலவாணி வீழ்ந்தது, கோட்டாவின் செயற்பாடுகளால் விவசாயம் வீழ்ந்தது, அபிவிருத்தியென்ற போர்வையில் வெளிநாட்டுக் கடன்களை பெற்றதால் மஹிந்தவின் படுகடன் ஏறியது. சந்திரிக்காவின் வோட்டர்ஸ் எட்ஜ் ஊழல் மக்களின் நம்பிக்கையில் கரியைப்பூசியது. இவற்றை எச்சரிக்கும் பாணியிலிருந்தன இவர்களுக்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்புக்கள். வறுமையால் பாதிப்புற்றோரின் எண்ணிக்கை முப்பது இலட்சத்திலிருந்து எழுபது இலட்சத்துக்கு உயரும் வரை, நிறைவேற்றதிகார ஜனாதிபதிகளின் செயற்பாடுகள் இருந்துள்ளன. வீண்விரயம் என்றும் இது பொருள்படும்.

இப்போது, ஆமையின் தலையில் மலையைச் சுமத்தியது போலுள்ளது நாட்டின் பொருளாதாரம். குடும்பச் செல்வாக்கிலும், போரை முடித்த தீரத்திலும் ராஜபக்ஷக்களின் நிர்வாகம் இருந்ததால், துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகள் புறந்தள்ளப்பட்டன. இது பொருளாதரத்தை படுகுழியில் தள்ளியதால், ஆட்சியிலிருந்து புறந்தள்ளப்படுமளவுக்கு ஆதரிப்பதற்கு நிபந்தனையும் விதித்துள்ள இவர்கள், தங்களிடமிருந்து கைமாறப்பட்ட நிறைவேற்றதிகாரம் இறுதி வரைக்கும் தங்களையே பாதுகாக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டில் உள்ளதாகவே தெரிகிறது.

போரின் வெற்றிக்குப் பின்னர், குறிப்பாக 2019 வெற்றிக்குப் பின்னர், அரசியல் நிர்வாகங்கள் இராணுவ நிபுணர்களால் நிரப்பப்பட்டன. தென்னிலங்கையை பிடியில் வைத்து வேண்டியதைச் செய்யலாமெனப் புறப்பட்டதால், பொருளாதாரத்தில் வீழ நேரிட்டது. 2020 நடுப்பகுதியில் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதை தெரிந்திருந்த இவர்களால், அங்கு செல்லுமளவுக்கு இமேஜ்கள் இருக்கவில்லை. இதிலிருந்து ஆரம்பமாகவில்லை இந்த வீழ்ச்சி. இச்சகோதரர்களின் மனநிலைகள் இறுமாப்பில் செயற்படத் தொடங்கியதிலிருந்தே ஆரம்பமானது. இந்த ஆரம்பம், பொருளாதாரத்தில் ஆபத்தை ஏற்படுத்த அடித்தளமிட்டது என்பதையே நீதித்துறை சுட்டிக்காட்டி உள்ளது.

# கொழும்பு - வேக்கந்த ஜும்ஆப் பள்ளிவாசல் வளவில் பலஸ்தீனின் கடந்த கால நிலைமைகள் கண்காட்சி



























(ஐ.ஏ. காதிர் கான்)

கொழும்பில் உள்ள ஈரான் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன், பலஸ்தீனின் கடந்த கால நிலைமைகள் குறித்த கண்காட்சி, கொழும்பு - 02, கொம்பனித்தெரு, வேக்கந்த ஜும்ஆப் பள்ளிவாசல் வளவில், (17) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணி முதல் பி.ப. 3 மணி வரை இடம்பெற்றது.

பலஸ்தீன் மக்களது கஷ்டங்கள், பலவந்தமாக பலஸ்தீன் நாட்டினைப் பிடித்து அங்கு நடைபெறும் கொடுமைகள் அடங்கிய காட்சிகள், இக்கண்காட்சியில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

இக்கண்காட்சியை, இலங்கைக்கான பலஸ்தீன் நாட்டுத் தூதுவர் கலாநிதி சுஹைர் எம். எச். ஸைத், இலங்கைக்கான ஈரான் நாட்டுத் தூதுவர் கலாநிதி அலிசேரா தெல்கோஸ் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

ஜும்ஆத் தொழுகையைத் தொடர்ந்து, இஸ்ரேலைக் கண்டித்து கண்டனப் பேரணி ஒன்றும், பள்ளிவாசல் முன்றலில் நடைபெற்றது.

இக்கண்காட்சி மற்றும் கண்டனப் பேரணியில், ஈரான் கலாசார கவுன்சிலர் கலாநிதி பீ. மூசாமி கொட்டுரஸா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டொக்டர் இல்யாஸ், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்திப்பிரிவு ஆசிரியர் பஸ்ஹான் ஏ. நவாஸ், முன்னாள் முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் அஹமத் முனவ்வர், வேக்கந்த ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் பஷீர் லத்தீப், செயலாளர் நஸீம் நயீம், சமூக செயற்பாட்டாளர் சிராஸ் யூனுஸ், அஹதிய்யா பாடாசலை அதிபர் ஷிப்லி ஹாஷிம் ஆகியோர் உள்ளிட்ட அதிதிகள், நலன் விரும்பிகள் எனப் பலரும் இக்கண்டனப் பேரணியில் கலந்து கொண்டிருந்தனர்.

## நோபல் உலக சாதனை



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

தமிழ்த் தொண்டன் பைந்தமிழ்ச் சங்கமும் நிலாவட்ட இலக்கிய அமைப்பும் சேர்ந்து நடாத்திய பத்தாயிரம் கவிதைகள் உலக சாதனைத் தொகுப்பு நூலான "கவித்தேனருவி" எனும் கவிதைத் தொகுப்பு நூலின் வெளியீட்டு விழா தொகுப்பாசிரியர் கவிஞர் என். சாகிர் உஷேன் தலைமையில் வடசென்னையில் உள்ள எருக்கஞ்சேரி வீ.ஆர்.எம். மஹாலில் (05) நடைபெற்றது.

இந்நூல் நூறு கவிஞர்களின் சிறப்பான நூறு கவிதைகள் வீதம் தொகுத்து உருவாக்கப்பட்டது அதன் சிறப்பம்சமாகும்.

இந்நூலில் இலங்கையில் வாழும் அரனாயக தல்கஸ்பிடியைச் சேர்ந்த ஆசிரியை கவிதாயினியும் எழுத்தாளருமான திருமதி நதீரா வசூக், "விடியலைத் தேடும் விழிகள் "என்ற தலைப்பில் சிறப்பான நூறு கவிதைகளுடன் தனக்கென ஓரிடத்தைப் பெற்று நோபல் உலக சாதனை படைத்தமை பாராட்டுக்குரியதே!

## ஹட்டன் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா










ஹட்டன் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

கல்லூரியின் தற்போதைய அதிபர் திரு. ஆறுமுகம் ரொபர்ட் மற்றும் சிங்களப் பிரிவின் அதிபர் திருமதி தம்மிகா கருணாரத்ன தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஹட்டன் வலயக் கல்வித் திணைக்களப் பணிப்பாளர் திரு. நிஹால் அழககோன் அதிதியாக கலந்துகொண்டார்.

கலாநிதி த. தனராஜா பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இந் நிகழ்வில் மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஏ. சத்தியந்திரா சிறப்பு விருந்தினராகவும், கௌரவ அதிதியாக திரு. பி. ஜெயராஜா, கல்லூரியின் பழைய மாணவரும், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரின் ஊடகச் செயலாளருமான திரு. தாரக்க முத்துதந்திரி உட்பட திரு. எஸ். கிரேஷாந்த் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கல்லூரி மாணவ, மாணவிகள் பல்வேறு நடன நிகழ்ச்சிகள் மூலம் தமது திறமைகளை வெளிப்படுத்தி விழாவை சிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.

- சம்மாந்துறை தேசிய பாடசாலை 'பேசும் பாடசாலை' இதுவே எனது இலக்கு.
- முரண்பாடுகளைக் களைந்து: உடன்பாட்டிலிருந்து எனது பணியை ஆரம்பிக்கிறேன்.
- பழைய மாணவர் அமைப்பின் புதிய நிர்வாகத் தெரிவு டிசம்பரில் இடம்பெறும்.
- பாடசாலையின் வளர்ச்சிக்காக பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரினதும் ஆதவரவையும், கருத்துக்களையும் வரவேற்கின்றேன்.

# தேசிய பாடசாலை "பேசும் பாடசாலை"

## மறைந்த நாமத்தை உயிர்ப்பிக்க முனைய வேண்டும்!

### புதிய அதிபர் ஜனோபர் அழைப்பு!!!





**நேர்காணல்:**
**கியாஸ் ஏ. புஹாரி**

**சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலைக்கு கடந்த 03.11.2023 அன்று புதிய அதிபராக கடமையேற்ற எம்.ரீ. முஹம்மட் ஜனோபர் அவர்களுடனான நேர்காணலின் தொகுப்பு:**

**கேள்வி:** புதிய நியமனம் பெற்ற அதிபர் அவர்களே! முதற்கண் உங்களுக்கான வாழ்த்துக்கள்!. இந்த அதிபர் நியமனம் குறித்தான உங்கள் பார்வை என்ன?

**பதில்:** இந்த நியமனம் குறித்து எனது பார்வையில் கூறுவதானால்,

எமது பாடசாலையைப் பொறுத்த வரையில் நீண்ட காலமாக பொருத்தமான அதிபரை தேடிக் கொண்டிருந்த ஒரு நிலைமையாகவே இருந்தது. அது பாடசாலை சமூகம் மாத்திரமில்லாமல் முழு ஊருமே தமது தாய்ப் பாடசாலைக்கான தகுதியான அதிபரை தேடும் பணியில் அக்கரையுள்ளவர்களாக இருந்தனர். இந்த நிலையில் எமதூ ரின் முச் சபைகள், நலன் விரும்பிகள், பழைய மாணவரகள் பலர் இதில் எடுத்துக்கொண்ட அக்கறையின் பலனாக அல்லாஹ்வின் நாட்டம் எனக்கு தற்போது அதிபராக கடையாற்றக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

**கேள்வி:** நீங்கள் அதிபராக கடமையேற்ற இந்த குறுகிய நாட்களுக்குள் நிர்வாக ரீதியிலான உங்களது கண்ணோட்டம் யாது?

**பதில்:** இங்கு குறிப்பிட்ட சில காலமாக நிர்வாக சீரின்மை பெரும் பேசுபொருளாக மாறிவிட்டது. அவற்றுக்குள் பல கெடுபிடிகள் சிக்கியிருந்தன. இவற்றை கருத்திலெடுத்துதான் எமதூரின் முச் சபைகளும் ஒரு சில நலன்விரும்பிகளும் இந்த பாடசாலைக்கான தகுதியான அதிபரை இனங்கானும் பணியில் தீவிரமாக செயற்பட்டனர்.

அவர்களது செயற்பாட்டின் வெளிப்பாடே எனக்களிக்கப்பட்ட நியமனமாகும். இந்தப் பாடசாலையின் மீது அக்கறை என்னிடமுள்ளது. 2014 ஆம் ஆண்டு முதல் இந்தப் பாடசாலையில் கல்வி கற்பித்த ஒரு ஆசிரியர் நான். இதே பாடசாலையில் ஆசிரியராக இருக்கும் போதுதான் 2016 ஆம் ஆண்டு அதிபர் சேவை பரீட்சை எழுதி சித்தியடைந்தேன். பிற்காலத்தில் பிரதி அதிபராகவம் செயலாற்றியிருக்கிறேன். இன்ஷா அல்லாஹ் தூய நோக்கத்துடன் நான் பாரமேற்ற இந்த பணியைக் கொண்டு அனைவரின் ஒத்துழைப்புக்களையும் எதிர்பார்த்து பாடசாலையின் வெற்றிக்காக உழைக்க வேண்டும் - என எதிர்பார்க்கின்றேன்.

**கேள்வி:** குறிப்பிட்ட சில வருடங்களாக பாடசாலையின் உள்ளகக் கட்டமைப்பிலுள்ள நிர்வாகக் குழு மற்றும் பாடசாலை சூழலில் அமைந்த பழைய மாணவர்கள் அமைப்பு மற்றும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பாடலில் பல பிணக்குகளை அவதானிக்க கூடியதாக இருந்ததன. இவற்றினது பயணம் உங்களது காலகட்டத்தில் எவ்வாறு அமையும்?

**பதில்:** எனக்கு எப்போதும் எவருடனும் பகைமைகளை வளர்த்துக் கொண்டு நிரவாகம் செய்வதில் உடன்பாடில்லை. கடந்த சில ஆண்டுகளில் நிர்வாகங்களுக்கிடையே ஒன்றுக்கொன்று எதிர்க் கருத்துக்களும், ஒவ்வாமைகளும் இருந்த போதிலும் அவற்றை இனிவரும் காலங்களில் வினைத்திறனாகும் வகையில் ஒரே கோட்டின் கீழ் பயணிக்க கூடிய முயற்சியில் தற்போது முனைப்புடன் செயற்படுகின்றேன்.

அந்த அடிப்படையில் சில தினங்களுக்கு முன்னர் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவினருடனான சந்திப்பு இடம்பெற்றது. அந்த சந்திப்பு மிகவும் சிநேகபூர்வமாக அமைந்ததுடன், அவர்களின் முழு ஒத்தாசைகளையும் தற்போதுள்ள பாடசாலைக் கட்டமைப்பின் முகாமைத்துவ குழுவுக்கு வழங்குவதாக உறுதியளித்துள்ளனர்.

அதேபோல், பழைய மாணவர் அமைப்புடனும் இன்றைய தினம் சந்திப்பு இடம்பெற்றது. அதுவும் பக்க பலமாக அமைந்துள்ளது, ஒத்தாசை நல்குவதாக கூறியுள்ளனர்.

**கேள்வி:** பழைய மாணவர் அமைப்புக்கும் அப்போதைய பாடசாலை நிர்வாகக் குழுவுக்கும் உள்ளக முரண்பாடுகள் அதிமாக இருந்தன. இது பலரும் அறிந்த விடயம். அவ்வாறிருக்கையில் கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் குறித்த அமைப்பு கலைக்கப்பட்டு விட்டதாக அப்போதைய அதிபரினால் கருத்து வெளியிடப்பட்டிருந்தது. இருப்பினும், தற்போது எந்த அடிப்படையில் அதே உறுப்பினர்களை பழைய மாணவர் அமைப்பின் நிர்வாக குழுவாக அழைத்துள்ளீர்கள்?

**பதில்:** நல்லதொரு வினா! பழைய மாணவர் அமைப்பு உருவான பின்னரான காலப் பகுதியில் உள்ளக ரீதியில் முன்னரிருந்த பாடசாலை நிர்வாகக் குழுக்களுடன் ஒவ்வாமை இருந்த போதிலும், அது அணையா நெருப்பாக வலுப்பெற்று தனிநபர் பிணக்குளாக பணிப்போராகியதே தவிர, அதை சமரசம் செய்யும் எண்ணம் அவர்கள் எவரிடமும் காணப்படவில்லை. இதை குறையாக சுட்டிக் காட்ட முடியாது. அது அன்றிருந்த இக்கட்டான சூழல் என்றுதான் கூற முடியும்.

இருந்தாலும், உங்கள் வினாவிற்கு பதிலளிக்க வேண்டிய கடமைப்பாட்டின் அடிப்படையில், தற்போது சந்தித்துள்ள கலைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நிர்வாகக் குழுவானது முன்னரிருந்து அதிபரினால் கலைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டாலும், அதன் பின்னர் சில காலம் கடமையாற்றி மற்றய அதிபரினால் அதே நிர்வாகம் செயற்பட்டிருக்கின்றது.

அதனடிப்படையிலேதான் தற்போது நான் அதே அமைப்பினரை சந்தித்தேன். அதில் உடன்பாடான கருத்துக்களுடன் அந்த உறுப்பினர்கள் அனைவரும் செயற்பட்டார்கள். அதே வேளை பெரும்பாலும் எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் புதிய நிர்வாக உறுப்பினர்களையும் தெரிவுசெய்வதாக பரஸ்பர தீர்மாணத்துக்கு வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே இனிவரும் காலங்களில் பாடசாலையும், பாடசாலை சூழலிலுள்ள அமைப்புகளும் ஒரே நேர்கோட்டில் பயணிக்கும் திட்டங்களைத்தான் தற்போது உருவாக்குகின்றோம். இன்ஷா அல்லாஹ் இன்னும் சில மாதங்களில் அவை சீராகிவிடும் என்கிற பூரண நம்பிக்கை எனக்கு உள்ளது.

சுருக்கமாக கூறின் எனது இந்த பொறுப்பு வாய்ந்த, புனிதமான பணியை முரண்பாட்டிலிருந்து ஆரம்பிக்க எனக்கு உசிதமில்லை. மாறாக உடன்பாட்டிலிருந்தே ஆரம்பிக்க தயாராகின்றேன்.

**கேள்வி:** பாடசாலையின் பௌதீகக் கட்டமைப்பு தற்போதுள்ள நிலைமையில் உங்களுக்கு ஒத்தாசையாக உள்ளனவா?

**பதில்:** உண்மையில், இது ஒரு பெரிய பாடசாலை ஆளணி அதிமாக உள்ள பாடசாலை ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் அனைவரையும் உள்ளடக்கி சுமார் 200 இற்கு மேற்பட்டவர்கள் உள்ளனர். அதே போல் 2700 மாணவர்கள் தற்போதைய காலகட்டத்தில் கல்வி கற்கின்றனர்.

இதற்காக குறைந்தது 90 வகுப்பறைகள் இருக்க வேண்டும். ஆனால், தற்போது 60 வகுப்பறைகளே உள்ளன. இதே நேரம் காலாவதியான கட்டங்களிலும் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்து செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளன. இவை தவிர இன்னும் சில கற்றல் நடவடிக்கைகளுக்கான வளப்பற்றாக்குறை நிலவுகின்றது.

இவ்வாறான குறைகளை நிவர்த்திக்க அதிபரால் மட்டுமோ அல்லது பாடசாலை முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி குழுக்களால் மட்டுமொ முடியாது. மாறாக இப் பாடசாலை மீது நேசம் கொண்டுள்ள அனைத்து பழைய மாணவர்களும் ஒத்துழைக்க வேண்டும்.

இங்கு கற்ற பலரும் பல்வேறு உயர் பதவிகளில் உள்ளனர். தாழிலதிபர்களாக உள்ளனர். அரசியல் பிரமுகர்களாக உள்ளனர். ஆகையால், நான் திறந்த அழைப்பு விடுக்கிறேன். பாடசாலை மீது பற்றுள்ள நீங்கள் ஒவ்வொருவரும் எந்த சந்தர்ப்பத்திலும் எம்மோடு தொடர்புகொள்ளலாம். ஆலோசனைகளை கூறலாம். உதவி ஒத்தாசைகளை வழங்கலாம்.

இது நமது பாடசாலை நாமே இதன் வளர்ச்சிக் கரங்களாக திகழ வேண்டும்.

அத்துடன், மாணவர்களின் வரவு தற்போதைய காலகட்டத்தில் மிகவும் குறைவாக காணப்படுகின்றது. 30 மாணவர்கள் இருக்கக்கூடிய வகுப்பறையில் நாளொன்றுக்கான மாணவர் வருகை 5 தொடக்கம் 10 என காணப்படுகின்றது. இவற்றை பாடசாலை நிர்வாகக் குழுக்கள் நிவர்த்தி செய்ய முடியாது. பெற்றோர்கள்தான் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தாங்களது பிள்ளைகளின் பாடசாலை வரவு மற்றும் கற்றல் விடயங்களில் நீங்கள் தலையீடு செய்து அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது குறித்து எம்மிடம் கேளுங்கள். எந்தவொரு மாணவர்களின் குறைபாடுகளை கற்றல் குறைபாடுகளை நிவர்த்திக்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்குள்ளது.

எனவே, மாணவர்களின் செயற்பாடுகள் குறித்து பெற்றோர் எமக்கு முழு ஒத்துழைப்பை வழங்குங்கள் என கேட்டுக்கொள்கின்றேன்.

**கேள்வி:** பொதுவாக ஒரு நிறுவனத்தில் ஒருவர் தலைமைப் பொறுப்பை கையேற்கும் போது ஒரு குறிக்கோள் மற்றும் இலக்கு இருக்கும். அவ்வாறு உங்களுக்குள்ள இலக்கு?

**பதில்:** ஆம், சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயமானது "பேசும் பாடசாலை" ஆக மிளிர வேண்டும். என்பதுதான் எனது இலக்கு, அதாவது முன்னொரு காலத்தில் எத்தனையோ ஊர்கள் இருந்தெல்லாம் சம்மாந்துறை தேசிய பாடசாலைக்கு விடுதியில் தங்கி மாணவர்கள் கற்றலுக்காக வந்தார்கள். அப்படி நோக்கும் போது அந்த நிலைமை இன்று தலைகீழாக மாறியுள்ளது.

மாற்றம் ஒன்றே மாறாதது எனும் கருத்துருவில் மீண்டும் ஒரு நல்ல யுகத்தை இந்தப் பாடசாலை விரைவில் பெற்று 'பேசும் பாடசாலை' எனும் மகுடத்தைச் சுமக்க வேண்டும். இதற்காக உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்புகளையும், ஆலோசனைகளையும் எதிர்பார்த்திருக்கின்றேன்.

வளத்திலும், சுற்றுச் சூழலிலும் தன்னிறைவு கொண்டுள்ள இப் பாடசாலை நிச்சயம் ஒருநாள் "பேசும் பாடசாலையாக மிளிரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இன்ஷா அல்லாஹ்!

அதே நேரம், பாடசாலை அபிவிருத்தி விடயங்களில் உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களையும், சிந்தனைகளையும் வரவேற்கின்றேன்.

***

# தம்புள்ளை வரையுள்ள அதிவேக நெடுஞ்சாலையை வாழைச்சேனை வரை விஸ்தரிக்க வேண்டும்

## - ஹரீஸ் எம்.பி. பாராளுமன்றில் எடுத்துரைப்பு -



தம்புள்ளை வரையுமான அதிவேக நெடுஞ்சாலையை வாழைச்சேனை வரை விஸ்தரிக்க வேண்டும் என அரசாங்கத்திடம் பாராளுன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்ற அமர்வு (15) இடம்பெற்ற போது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம். எம்.ஹரீஸ் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில்

இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகள் வருகின்ற போது நாட்டில் எதிர்பாராதா பொருளாதார ஒரு மலர்ச்சி நிச்சயம் ஏற்படும் என்ற நம்பிக்கை உள்ளது.

உதாரணமாக நான் பிரதிநித்துவப் படுத்துகின்ற கிழக்கு மாகாணம் இன்று எல்லா வளமும் இருக்கின்ற ஒரு மாகாணமாகும் சுற்றுலா துறையை எடுத்து கொண்டால் சபைக்கு தலைமை தாங்கும் உறுப்பினரின் அருகம்பை பிரதேசம் தொடக்கம் அதே போல் பாசிக்குடா,நிலாவெளி அதற்கிடையில் பல நகரங்களில் சுற்றுலா துறை என்பது இன்று பெரும் இதை விட பலமடங்கு அபிவிருத்தி செய்ய வேண்டிய பிரதேசமாக கிழக்கு மாகாணம் உள்ளது .

ஆனால் அங்கு நிலையான அபிவிருத்தி என்பது இன்று மட்டுப்படுத்தப்படட நிலையில் உள்ளது அதாவது தலை நகரத்துக்கும்,விமான நிலையத்துக்கும்,கிழக்கு மாகாணத்துக்குமிடையிலான போக்குவரத்து என்பது ஒரு பெரும் சாவாலான விடயமாக உள்ளது முன்னைய ஜானாதிபதிகளான மகிந்த ராஜபக்ச, மைதிரிபால சிறிசேனவின் அரசாங்கங்கள் நாட்டில் அதி வேக நெடுஞசாலைகளை பல இடங்களில் விஸ்தரித்து இருந்தார்கள்

எங்கள் ஜனாதிபதி அவர்களிடமும் இங்கு உள்ள இராஜாங்க நிதியமைச்சர்,இராஜாங்க முதலீட்டு அமைச்சர் ஆகியோரிடம் நாங்கள் விடுக்கின்ற வேண்டுகோள் என்னவென்றால் தம்புள்ளை வரையுமான அதிவேக நெடுஞ்சாலையை கிழக்கு மாகாணத்துக்கு குறைந்த பட்சம் வாழைச்சேனை வரை முதற்கட்டமாக விஸ்தரிக்க அதற்கான வரைபடம்,மதிப்பீட்டு தொகையினை தாயாரிக்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் இதனால் கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறை மட்டுமல்லாமல் கைத்தொழில் புரட்சியை ஏற்ப்படுத்த முடியும் என்றார்.

# பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம்



பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) உமர் ஃபாரூக் பர்கி அவர்கள் நவம்பர் 5 முதல் 8 வரை கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு பல்வேறு இராணுவ, அரசியல் மற்றும் சமூக நலன் சார்ந்த பிரமுகர்களை சந்தித்தார். அத்துடன் பொத்துவில் மற்றும் ஒலுவில் பிரதேச வறிய குடும்பங்களுக்கு உலர் உணவு பைகளையும் பாடசாலைகளுக்கு தளபாடங்களையும் வழங்கி வைத்தார். மதம், பாலினம் மற்றும் இனம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் சமூக நலன், நட்பு மற்றும் இலங்கை சமூகத்திற்கான ஆதரவிற்கான பாகிஸ்தானின் அர்ப்பணிப்பை இந்த நிகழ்வு பிரதிபலிக்கிறது.

மற்றுமொரு நிகழ்வில், உயர்ஸ்தானிகர் கல்முனைக்குடி பிரதேசத்தில் உள்ள விதவைகள் மற்றும் வறிய குடும்பங்களுக்கு தையல் இயந்திரங்களை வழங்கி வைத்தார். கிழக்கு மாகாண மக்களின் அமோக வரவேற்புக்கு உயர்ஸ்தானிகர் நன்றி தெரிவித்ததோடு இலங்கை மக்களின் நலனுக்காக பாகிஸ்தான் எப்போதும் ஆதரவாக நிற்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். சுற்றுலா, உள்ளூர் சிறு வணிகம், ஹோட்டல் துறை, கடல் அலைச்சறுக்கு போன்ற துறைகளில் கிழக்கு மாகாணத்தில் பாரிய வாய்ப்புகள் நிறைந்துள்ளதாக உயர்ஸ்தானிகர் சுட்டிக்காட்டினார். பாகிஸ்தானும் இலங்கையும் ஒன்றிணைந்து பரஸ்பர இருதரப்பு ஆர்வமுள்ள பல துறைகளில் ஒருவருக்கொருவர் கற்றுக்கொள்ள முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

கிழக்கு மாகாணத்திற்கான விஜயத்தின் போது உயர்ஸ்தானிகர் பானமவில் தென்கிழக்கு கடற்படை கட்டளைத் தளபதியையும் திருகோணமலையில் கிழக்கு கடற்படை கட்டளைத் தளபதியையும் சந்தித்தார். இரு நாடுகளுக்கு இடையேயான பாதுகாப்பு மற்றும் ராணுவ உறவுகளை மேலும் வலுப்படுத்த பரஸ்பர நலன் சார்ந்த விஷயங்கள் குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டது.

கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ்.எம்.எம்.முஸ ாரப் மற்றும் ரஹ்மத் அறக்கட்டளையின் தலைவர் திரு. அப்துல் ரகுமான் மன்சூர் ஆகியோர் உயர்ஸ்தானிகரின் இந்த நிகழ்வுகளுக்கு தேவையான ஒருங்கிணைப்புகளையும் செய்தனர்.

# சீன்ன் கோட்டை வாலிபர் ஹழரா





ஜெமாஅத்தின் ஏற்பாட்டிலான 42வது வருட மீலாத் விழாவில் பல பிரமுகர்கள் கௌரவிக்கப்பட்டனர். களுத்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் துமிந்த ராஜபக்சவுக்கான நினைவுச் சின்னத்தை ஹழரா ஜெமாஅத் உறுப்பினர் முஹம்மத் அஹ்லஸ் பொலிஸ் அதிகாரி எலுவலகத்தில் வைத்து கையளித்தார்.

இணைச் செயலாளர் சம்மாஸ் கரீம் மற்றும் நுஸ்ஹான் ஹம்ஸா ஆகியோரும் இதன் போது சமூகமளித்திருந்தனர்.

(படங்கள் – பேருவளை பீ.எம். முக்தார்)

# ஒரு கல்லூரியின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாகத் திகழ்பவர்கள் பழைய மாணவர்களே

## -கண்டியில் தீனிய்யா ஆலிம்களின் ஒன்று கூடலில் அல் ஆலிம் முனவ்வர் தீனி-

(ஐ.ஏ. காதிர் கான்)

பாணந்துறை – பள்ளிமுல்லை, தீனிய்யா (பழைய மாணவர் சங்கம்) ஆலிம்களின் ஒன்று கூடல் நிகழ்வு, கண்டி – மர்கஸ், லைன் ஜ/ம்ஆப் பள்ளிவாசலில், அகில இலங்கை ஜம் – இய்யத்துல் உலமா கண்டி மாவட்டக் கிளை பொதுச் செயலாளர் அல் ஆலிம் ஏ.எல். அப்துல் ககப்கபார் (தீனி) தலைமையில் சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வை, தெஹிவளை – "ஹை அதுல் குர்ஆன்" மேற்படிப்பு மாணவர் அல் ஆலிம் எம்.என். அப்துல்லாஹ் (தீனி) கிராஅத் முழங்கி ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில், கண்டி – கபுர்கானிய்யா தாருல் உலூம் ஆசிரியர் அல் ஆலிம் எம்.ரீ.எம். இக்ராம் (தீனி) வரவேற்புரையையும்,

அல் ஆலிம் ஏ.எல். அப்துல் ககப்கபார் (தீனி) தலைமை உரையையும் நிகழ்த்தினர்.

குருநாகல் – சியம்பளாகஸ்கொட்டுவ, நூரிய்யா அரபுக் கல்லூரி அதிபர் அல் ஆலிம் எஸ்.டி.எம். முனவ்வர் (தீனி) இங்கு கருத்துத் தெரிவிக்கும்போது,

ஒரு கல்லூரியின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாகத் திகழும் பழைய மாணவர்களை ஒன்று சேர்க்கும் பணி, மிக நீண்ட நாட்களாக எமது கனவாகவே இருந்து வந்தமை நாம் எல்லோரும் அறிந்ததே.



அந்தக் கனவு நனவாகிய இத்தருணத்தில் நாம், அளவிலா ஆனந்தம் அடைவதுடன், எமது அக்கனவை நனவாக்கிய பெருமை நமது கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினர்களையே சாரும். அத்துடன், இதுவரை எம்மோடு இணைந்து பாடுபடும் பழைய மாணவர்கள், இந்நிகழ்வை சிறப்பாகச் செய்து முடிக்க ஒத்துழைப்புக்களை நல்கியவர்கள் மற்றும் கால நிலையைக் கருத்திற் கொள்ளாது நேர காலங்களை ஒதுக்கி, எமது அழைப்பை ஏற்று வெகு தூரத்தில் இருந்து இந்த ஒன்று கூடலுக்காக வருகை தந்துள்ளவர்கள் அனைவரையும் நன்றி உணர்வோடு நினைவு கூறுகின்றோம்.

எமது கல்லூரியினது வளர்ச்சிக்கும் எங்களது எதிர்கால நலனுக்காகவும் தீனிய்யா நிர்வாகிகள் அரும் பாடுபட்டு உழைத்து வருகின்றார்கள். சுமார் எட்டு அல்லது பத்து வருடங்களாக எம்மிடமிருந்து எதுவித பொருள் உதவியோ பண உதவியோ பெறாமல் முற்றிலும் இலவசமாகவே எமது கல்விக்கான அனைத்துத் தேவைகளையும் வசதிகளையும் நிறைவேற்றித் தந்திருக்கின்றார்கள். இதற்காக நாம் அவர்களைப் புகழ்வதோடு, காலாகாலம் என்றுமே அவர்களுக்கு நன்றியுணர்வு உள்ளவர்களாக இருப்பதற்கும் கடமைப்பட்டுள்ளோம்.

நாம் ஒருபோதும் நிர்வாகிகளுக்கு எதிராகவோ அல்லது கல்லூரி ஆசிரியர்களுக்கு மாற்றமாகவோ செயற்பட்டதில்லை. இனிமேலும், அவ்வாறான எண்ணங்கள் எதுவுமே எம்மிடம் துளியளவும் இல்லை என்பதையும் ஆணித்தரமாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். இதுபோன்ற ஒன்று கூடல்களை, கல்லூரியில் நடத்துவதே சிறந்தது. என்றாலும், கல்லூரியில் பழைய மாணவர் சங்கம் ஒன்று இதுவரையில் இயங்காததினால் தான், கல்லூரிக்கு வெளியே இவ்வாறானதொரு ஒன்று கூடலை முதன் முறையாக நடத்துவதற்கு எம்மைத் தூண்டியது" என்று குறிப்பிட்டார்.

தொழிலதிபர் அல் ஆலிம் ஏ.எம். மர்ஸூக் தீனியின் உரை, ஆலியா ஹஜ் – உம்ரா சேவை உரிமையாளர் அல் ஆலிம் எஸ்.ஐ. மஸ்ஊத் தீனியின் கஸீதா, அகில இலங்கை ஜம் – இய்யத்துல் உலமா கேகாலை மாவட்ட ஹிங்குலோயா கிளையின் தலைவர் அல் ஆலிம் எம். என்.எம். அன்கபஸ் தீனியின் நிர்வாக அறிக்கை சமர்ப்பிப்பு, அல் ஆலிம் ஆர்.எம். எம். ஏ.ஜீ. ஸலா/ஹத்தீன் தீனியின் நன்றியுரை, அல் ஆலிம் ஏ.எஸ். ஜஃபர் தீனியின் துஆப் பிரார்த்தனை என்பனவற்றுடன் இந்த ஒன்று கூடல் நிகழ்வு, ஸலவாத்துடன் இனிதே நிறைவு பெற்றது.

# கலாநிதி ஹஸன் மௌலானாவுக்கு ஸ்ரீலங்கா ஷரீஆ கவுன்சில் தலைவர் வாழ்த்து



(ஐ.ஏ. காதிர் கான்)

இலங்கை தேசிய ஐக்கியத்திற்கான சர்வமதக் கூட்டமைப்பின் முஸ்லிம் விவகார சம - தலைவர் அல் - ஹாஜ், அஷ் - ஸெய்யித் கலாநிதி ஹஸன் மௌலானா அல் -- காதிரி, அண்மையில் ஐக்கிய நாடுகள் சமாதானத் தூதுவர்கள் பேரவையின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஹஸன் மௌலானாவை, ஸ்ரீ லங்கா ஷரீஆ கவுன்ஸிலின் ஆயுட்காலத் தலைவரும், பஹ்ஜதுல் இப்ராஹீமிய்யா அரபுக் கல்லூரியின் பணிப்பாளருமான அல் - ஹாஜ், அஷ் - ஷெய்க் தேசமான்ய ஹஸ்புல்லாஹ் அப்துல் காதிர் பஹ்ஜி, (16) வியாழக்கிழமை உத்தியோகப்பூர்வமாகச் சந்தித்து பொண்ணாடை போர்த்தி, தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், "பஹன மீடியா" வின் முகாமைத்துவப் பணிப்பாளர் அஷ் - ஷெய்க் அப்துல் முஜீப், ஜாமிஉல் கைராத் மஸ்ஜித் பிரதம இமாம் அல் - ஹாஜ் அஷ் - ஷெய்க் ஏ.எச்.எம். மஹ்தி (ரவ்ழி) மற்றும் "நிவ்ஸ் நவ் மீடியா" வின் பிரதம ஆசிரியர் பியாஸ் முஹம்மத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கலாநிதி ஹஸன் மௌலானா, 20 வருடங்களுக்கும் மேலாக இலங்கையில் சமயங்கள் மற்றும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம், சக வாழ்வு என்பனவற்றுடன் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்காக, சர்வ மதத் தலைவர்களுடன் இணைந்து பணியாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழ். ஒஸ்மானியா கல்லூரியில் ஐந்து மாணவர்கள் சித்தி

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ் ஒஸ்மானியா கல்லூரியில் 5 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

M.R. ஆதிலா அக்ஸா - 164, சு.ஸஹீம் - 160, B.A. அம்றா௵ 156, M.I. பாத்திமா இஸ்மா - 149, ஆ.சு. அப்துல் முஹ்ஸி - 148,

யாழ் ஒஸ்மானியா கல்லூரியில் 5 மாணவர்கள் ஒரே தடவையில் சித்தியடைந்திருப்பது இதுவே முதல் தடவையாகும் என கல்லூரி அதிபர் கௌரவ ே.ஆ. ஷாபி தெரிவித்தார்.

(யாழ். பரீட் இக்பால்)

# மொ / பகினிகஹவெல முஸ்லிம் ஆரம்ப பாடசாலை தரம் 5 பரீட்சையில் ஆறு மாணவர்கள் சித்தி

(சிஹார் மொனறாகலை)

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை கடந்த ஒக்டோபர் 15ம் திகதி நபைபெற்றது, அதனடிப்படையில் பரீட்சை முடிவுகள் 2023.11.17 ம் திகதி பரீட்சை திணைக்களத்தினால் முடிவுகளின் பிரகாரம் மொ பகினிகஹவெல ஆரம்ப பாடசாலை மாணவர்களான அப்துல்லாஹ் 169, சன்ஹா 154, சாரா ஸைனப் 153, மிஸ்கா 152, மஸீன் 149, ஸம்லா சரீகத் 148 தலா புள்ளிகளைப் பெற்றுக்கெண்டனர்

இவர்களை அப்வான் ஆசிரியர் மற்றும் அஸாமா ஆசிரியை வழிநடாத்திவர்களாவர்.

# அழிக்கப்படும் அடையாளம் தப்தர் ஜெய்லானி கள ஆய்வு



சபீர் மொஹமட்

## கடந்த வார தொடர்ச்சி...



### யார் அந்த ரங்கா.

கூரகல விகாரையில் மஞ்சள் நிறத்தில் டீசேர்ட் அணிந்த கிட்டத்தட்ட 20 காவலாளிகள் எப்போதும் இருப்பார்களாம். அவர்களின் தலைவன் போல் இருப்பவன் தான் ரங்கா. நாங்கள் முதலிலே மேலே சென்றபோதும் அவர்கள்தான் விகாரைக்கு வருகின்ற பக்தர்களை வழி நடத்தினார்கள். அவர்கள் முஸ்லிம் கடைகளுக்கு வருகின்ற சிங்களவர்களை விரட்டுவதோடு மதிலோரமாக பொருட்களை விற்பனை செய்கின்ற முஸ்லிம்களுக்கு ஏசுவதை நாங்கள் அவதானித்தோம். நாம் அங்கே செல்வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக சிங்களவர்களுக்கு பொருட்களை விற்பனை செய்த காரணத்திற்காக அவர்கள் உடைத்து நொறுக்கிய கடை ஒன்றை அங்கிருந்த ஒருவர் எங்களுக்கு காட்டினார். நாம் அங்கே கடைக்குள் உட்கார்ந்திருக்கும் நேரம் மிகவும் இழிவான முறையில் அங்கு வியாபாரம் செய்து கொண்டிருந்த முஸ்லிம்களை மஞ்சள் நிற ரீசேர்ட் அணிந்த காவலாளிகள் மிரட்டுவதையும் நாம் கண்டோம்.

”இது இன்று நேற்று நடக்கின்ற ஒரு விடயம் அல்ல. கிட்டத்தட்ட ஒரு வருடமாக இந்த பாதையை இராணுவத்தினர் மூடியே உள்ளனர். எந்த ஒரு வாகனத்திற்கும் மேலே வருவதற்கு அனுமதி இல்லை. எங்களை இங்கிருந்து விரட்டுவது தான் அவர்களுடைய முழு முயற்சியாக இருக்கின்றது. எங்களுடைய கடைகளுக்கு மேலே பின்னால் இருக்கின்ற மரங்களை வெட்டி வீழ்த்தினார்கள். தினமும் தொல்லை தருகின்றார்கள். எனக்கு மட்டுமல்ல என்னுடைய மனைவியையும் மிகவும் கேவலமான முறையில் அவர்கள் ஏசுகின்றார்கள். நாங்கள் பொலிசாரிடம் முறைப்பாடு செய்தால் நீங்கள் இங்கிருந்து சென்று விடுங்கள் என அவர்களும் எமக்கு கூறுகின்றார்கள். தனது அடையாளத்தை வெளிப்படுத்த விரும்பாத ஒரு முஸ்லிம் சகோதரர் இவ்வாறு கூறினார். அவர் மட்டுமல்ல அந்த கடைகளில் இருந்த எவருமே தன்னுடைய அடையாளத்தை வெளிப்படுத்த விரும்பவில்லை. “நீங்கள் இந்தக் கதைகளை கேட்டுவிட்டு சென்று விடுவீர்கள். நாங்கள் தான் அதன் பிறகு அடிபட வேண்டும். எங்களுடைய உயிருக்கே இப்போது உத்தரவாதம் இல்லை.”

### ஐசிசிபிஆர் “ஐஊஊஉீசு” வலை

அரசியல் அமைப்புச் சட்டத்தில் அடங்கப்படாதுள்ள மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக 2007ஆம் ஆண்டு முதல் இலங்கையில் ஐசிசிபிஆர் எனப்படுகின்ற “அனைத்துலக குடிசார் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை” சட்டம் செயற்பட்டு கொண்டிருக்கின்றது. ஆனால் அண்மைய காலங்களாக இந்த சட்டத்தை அரசு மக்களின் கருத்து சுதந்திரத்தை ஒடுக்குவதற்காகவும் தனிப்பட்ட பழிவாங்கல்களுக்காகவும் பயன்படுத்துவதை நேரடியாகவே நாங்கள் அவதானித்து வருகின்றோம். சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா, எழுத்தாளர் சக்திக சத்குமார, கவிஞர் அஹ்னாப் ஜெசீம் மற்றும் அண்மையில் கைது செய்யப்பட்ட நகைச்சுவை கலைஞர் நடாசா எதிரிசூரிய போன்ற பலரையும் கைது செய்து சிறையில் அடைக்க பொலீசார் பயன்படுத்திய ஐசிசிபிஆர் என்ற சட்டம் முஸ்லிம் கிராமத்தை சேர்ந்த ஒரு முஸ்லிம் வியாபாரிக்கு எதிராக கடந்த ஆண்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த நாற்பது வருடங்களாக கூரகல பள்ளிவாசலுக்கு அருகில் வியாபாரம் செய்து வரும் அவர் தனக்கு நேர்ந்த அநீதியை இவ்வாறு கூறினார். கடந்த ஆண்டு நோன்பு காலத்தில் திடீரென தனது கடைக்கு வந்த பொலீசார் வாக்குமூலம் ஒன்றை பெறுவதற்காக “கல்தொட” காவல் நிலையத்திற்கு வருமாறு கூறினார். அங்கே சென்று பல மணி நேரம் நான் காத்துக் கிடந்தேன். அதன் பின்னர் ‘ஜீரரத்ன” என்ற உப பொலீஸ் அதிகாரி என்னிடம் வாக்குமூலம் ஒன்றினை பெற்றது போல் ஏதோ எழுதி கையொப்பம் ஒன்றையும் பெற்றுக் கொண்டார். பொலீசாரை நம்பி நானும் கையெழுத்திட்டேன். பின்னர் காலையில் என்னை பலாங்கொடை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி 28 நாட்கள் குருவிட்ட சிறைச்சாலையில் அடைத்து வைத்தார்கள். அதன் பின்னர் தான் எனக்குத் தெரிய வந்தது ஏதோ ஐஊஊஉீசு என்ற சட்டத்தின் மூலம் என்னை கைது செய்துள்ளார்கள் என்று. அவர்கள் எனக்கு எதிராக முன் வைத்துள்ள குற்றச்சாட்டு, நான் இன்னும் ஒருவருடன் சேர்ந்து ஜெய்லானி பள்ளியின் உண்டியலை உடைத்தேன் என்பதாகும். பள்ளியில் தொழுது விட்டு வெளியே வரும்போது, பள்ளியின் தூசி கூட என் வீட்டுக்கு வரக்கூடாது என்று என் சாரத்தைக் கூட தட்டி விட்டு தான் நான் வருவேன். அப்படிப்பட்ட எனக்கு எதிராக இதுபோன்ற ஒரு குற்றச்சாட்டை முன் வைப்பது மிகவும் வேதனையை அளிக்கின்றது என கூறும் போதே அவரின் கண்களில் இருந்து கண்ணீர் கொட்டியது. இவருக்கு எதிரான இந்த வழக்கு இன்னும் பலாங்கொடை நீதிமன்றத்தில் வழக்கு எண் டீ159ஃ2022 கீழ் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் குறித்த பொலீஸ் நிலையத்தின் தலைமை பொறுப்பு அதிகாரியாக கடமையாற்றிக் கொண்டிருந்த “தரங்க” என்ற அதிகாரிக்கு எதிராக கொழும்பிலிருந்து விசாரணை ஒன்று நடந்து கொண்டிருப்பதாகவும், ஐசிசிபிஆர் சட்டத்தின் கீழ் வழக்கு பதியப்பட்ட குறித்த வியாபாரியைத் தேடி கொழும்பிலிருந்து ஒரு குழு வந்து வாக்குமூலம் ஒன்றையும் பெற்று சென்றதாக அவர் மேலும் கூறினார்.

### கூரகல தஞ்சந்தென்ன கத்தோலிக்க மக்கள் என்ன சொல்கிறார்கள்?

கூரகல விகாரை மற்றும் ஜெய்லானி பள்ளியிலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் உள்ள தஞ்சந்தன்ன கத்தோலிக்க தேவாலயத்திற்கு நாங்கள் சென்று அங்கிருந்த கத்தோலிக்க மக்களுடன் கலந்துரையாடினோம்.


“இந்த கிராமத்தில் கத்தோலிக்கர்கள், பௌத்தர்கள் மற்றும் முஸ்லிம்கள் வாழ்கின்றனர். நான் அறிந்த வகையில் நாங்கள் எந்தவொரு பிரச்சினையும் இல்லாமலேயே நீண்ட நாட்களாக வாழ்ந்து வந்தோம். ஆனால் ஞானசார தேரர் 2013 ஆம் ஆண்டு இங்கே வந்து பெரும் பிரச்சினையை உருவாக்கினார். அதன் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக பிரச்சினைகள் ஏற்பட தொடங்கியது. எனது தந்தை கூறியதன் படி இங்கே முஸ்லிம்கள் தான் முதலில் இருந்துள்ளார்கள். அந்த காலத்தில் சிங்களவர்கள் யாரும் அங்கே செல்வதில்லை என அவர் கூறியுள்ளார்.”

உண்மையைச் சொல்வதாயின், இக்கிராமத்தில் சிங்கள மக்களுக்கு எப்போதும் முஸ்லிம்கள் பயந்தவர்களாகவே இருந்தார்கள். எங்களுக்கு தெரிந்த வரையில் அவர்கள் மிகவும் அமைதியாக இருந்தார்களே தவிர நீங்கள் சொல்வது போல் சிலைகளை உடைத்து எதையும் அழிக்கவில்லை. ஒருமுறை எங்கள் ஆலயத்திற்கு வந்திருந்த சகோதரிகள் இருவர் கூரகல விகாரைக்கு செல்ல வேண்டும் என ஆசையுடன் அங்கே சென்றார்கள். அப்போது அவர்கள் தண்ணீர் போத்தல்களை வாங்க மேலே கடைகளுக்கு செல்லும் போது அவர்களை இராணுவத்தினர் செல்ல விடாமல் தடுத்துள்ளார்கள். அப்போது அந்த சகோதரிகள் நாங்கள் எந்தவொரு கலவரத்திற்கும் செல்லவில்லை இரண்டு தண்ணீர் போத்தல்களை வாங்கத்தான் செல்கின்றோம் எனக் கூறியும் அவர்களை இராணுவத்தினர் செல்ல விடாமல் தடுத்தார்களாம். இதிலிருந்தே உங்களுக்கு புரிந்து கொள்ள முடியும் அங்கே என்ன நடக்கின்றது என்று.”

### 50 வருட போராட்டத்தின் வெற்றியா கூரகல?

நெல்லிகல தேரர் ஏறுகின்ற எல்லா மேடைகளிலும் உரத்த குரலில் கூறுகின்ற ஒரு விடயம் தான், “ஐம்பது வருடகாலப் போராட்டத்தின் மூலம் தாம் வென்றெடுத்த இடம் கூரகல விகாரை”. இது குறித்து தஞ்சந்தன்ன பிரதேச கத்தோலிக்க மக்களிடம் நாம் வினவிய போது அவர்கள் “இது முற்றிலும் போலியான ஒரு வாதம். அவர் இங்கே வந்தபோது மக்கள் யாரும் அவரை எதிர்க்கவில்லை. அவர் கூறியது போல் இரண்டு வருடங்களில் இதனை செய்து முடித்தார். அவர் உண்மையிலேயே இந்த ஊரை முன்னேற்றி இருக்கின்றார். ஆனால் அவர் கூறுகின்ற சில விடயங்கள் நமக்கும் ஒரு சில எங்களுடைய பௌத்த நண்பர்களுக்கும் மிகவும் மன வருத்தத்தை அளிக்கின்றது. உண்மையிலேயே மிகவும் அமைதியாகவும் ஒற்றுமையுடனும் வாழ்ந்து வந்த இந்த ஊர் முஸ்லிம் சிங்கள மக்களுடைய ஒற்றுமையை அவர் சீர்குலைத்துள்ளார்”

அத்துடன் தேரர் மேடைகளில் அடிக்கடி கூறுகின்ற ஒரு விடயம் தான் முஸ்லிம்களிடமிருந்து இந்த காணிகளை பணம் கொடுத்து நான் வாங்கியுள்ளேன், என்பது. இது பற்றியும் நாங்கள் ஊர் மக்களிடம் கேட்டோம். ”அது முற்றிலும் பொய். ஒரு சிலரிடம் மாத்திரமே காசு கொடுத்து அவர் காணிகளை வாங்கினார். அதுவும் குலம் ஒன்றை கட்டுவதற்கு. வேறு எவரும் எதையும் விற்கவும் இல்லை வாங்கவும் இல்லை”





### இது பற்றி நெல்லிகல தேரர் கூறுவது என்ன ?

நீண்ட சிரமத்துக்கு மத்தியில் நாங்கள் நெல்லிகல தேரரிடம் இந்த குற்றச்சாட்டுகள் பற்றி வினவினோம். முதலிலே அவர் அங்கே கடை வைத்திருக்கின்ற முஸ்லிம் வியாபாரிகள் மிகவும் மோசமான முறையில் தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கூறினார். குறிப்பாக அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்வதாகவும் போதைப் பொருட்களை விற்பனை செய்வதாகவும் அவர் கூறினார். அதனாலேயே தான் அங்கே விகாரைக்கு வருபவர்களுக்கு வியாபாரம் செய்யக்கூடாது என தடை விதித்ததாக கூறினார். மேலும் தான் அந்த முஸ்லிம் கிராமத்துக்கு எந்த ஒரு இன மத வேறுபாடும் இன்றி உதவி செய்வதாகவும் பாடசாலை மாணவர்களுக்கும் அதே போன்று கற்றல் உபகரணங்களை வழங்கி உதவி செய்துள்ளதாகவும் கூறினார். ஆனாலும் அவ்வூர் முஸ்லிம்கள் முஸ்லிம்களுக்கு மாத்திரமே எப்போதும் உதவி செய்பவர்களாக இருப்பதாகவும் அவர்கள் எப்போதும் பெரும்பான்மை மக்களை விட்டு விலகி செல்ல முற்படுவதாகவும் குற்றம் சாட்டினார்.

அத்துடன் விகாரையை அமைப்பதற்கு முன்னர் தாம் ஜம்இய்யதுல் உலமாவிடம் சென்று இது பற்றி கலந்துரையாட முயற்சி செய்தபோது அவர்கள், ‘ஜெய்லானி என்பது மரணித்தவர்களை வணங்கி வழிபடுகின்ற ஒரு பள்ளிவாசல். அவர்களைப் பற்றி எமக்கு எதுவும் தெரியாது. நீங்கள் வக்பு சபையுடன் தான் அதுபற்றி பேச வேண்டும்’ என தெரிவித்ததாக கூறினார்கள். பின்னர் நாங்கள் இது பற்றி ஜம்இய்யதுல் உலமாவிடம் வினவிய போது, தேரர் கூறியதை முற்று முழுதாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா மறுத்தனர். குறித்த தேரர் ஜம்இய்யத்துல் உலமாவிடம் இது பற்றி கலந்துரையாடுவதற்காக வருகை தந்ததாகவும் அந்த சந்தர்ப்பத்தில் கலந்துரையாடலை ஆரம்பிப்பதற்கு முன்னமே, சூபி முஸ்லிம்கள் சிலை வணங்குபவர்களா? அவர்கள் முஸ்லிம்கள் இல்லையா? போன்ற கேள்விகளை கேட்டதாகவும் கூறினார்கள். அதன் பின்னர் ஜம்இய்யதுல் உலமாவின் பிரதிநிதிகள் “அப்படி எதுவும் இல்லை. இறந்தவர்களையும் கப்ருகளையும் பராமரிப்பது இஸ்லாத்தில் சுன்னாவாகும். அதனை நாங்கள் மறுக்க மாட்டோம். அவர்களும் முஸ்லிம்கள் தான்” என கூறியதாக கூறினார்கள். அதன் பின்னர் நெல்லிகல தேரர் தமது சொந்த செலவில் அங்கே வேறு ஒரு இடத்தில் புதிய பள்ளி ஒன்றை நிர்மாணிக்க உள்ளதாகவும் மேலும் அங்கே வழக்கு ஒன்று சென்று கொண்டிருப்பதாகவும் கூறினார்கள். அதற்கு பதில் கொடுத்த ஜம்இய்யத்துல் உலமா அங்கே வழக்கு ஒன்று சென்று கொண்டிருப்பதால் தங்களால் எதையும் செய்ய முடியாது எனவும் இது வக்பு சபை எடுக்க வேண்டிய முடிவு எனவும் கூறியதாக கூறினார்கள்.

ஊர்மக்கள் கூறுகின்ற விடயங்களை முற்றுமுழுதாக மறுத்த நெல்லிகல தேரர் அவ்வாறான எந்த ஒரு விடயமும் தனக்கு இதுவரை அறியக் கிடைக்கவில்லை என கூறினார். அத்துடன் முஸ்லிம்களுடன் தனிப்பட்ட ரீதியில் தனக்கு எந்தவித கோபமும் இல்லை எனவும் கூறினார்.

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தின் படி தொல்பொருள் பெறுமதி வாய்ந்ததாக பாதுகாக்கப்பட வேண்டிய பொருட்கள் கட்டடங்கள்

10ம் பக்கம் பார்க்க...



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

# மட்டு. முஸ்லிம்களின் காணி விவகாரம்:
# அரசியல்வாதிகள் அதிகாரிகள் கவனத்துக்கு!

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் பிரதேச செயலகப் பிரிவுகளில் நெருக்கடிகளின் மத்தியில் வாழும் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் காணிப் பிரச்சினை தொடர்பில் சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டிய விடயங்கள் ஏராளம் உள்ளன.

பனம்பலான ஆணைக்குழுவின் பரிந்துரையின்படி

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம் 11 கிராம அலுவலர் பிரிவுகளுடன் 240 சதுர கிலோமீற்றர் அதாவது (59,280 ஏக்கர்) நிலப்பரப்புக் கொண்டதாக உருவாக்கப்பட்டது.

அதேவேளை, அதனோடு அருகிலமைந்த பகுதி: கோறளைப்பற்று தெற்கு  கிரான் பிரதேச செயலகம் எனவும் அது 18 கிராம அலுவலர் பிரிவுகளுடன் 686 சதுர கிலோமீற்றர் (அதாவது 169,442 ஏக்கர்) நிலப்பரப்பும் கொண்டமைந்தாக உருவாக்கப்பட்டது.

இந்த புதிய கோறளைப்பற்று தெற்கு - கிரான் பிரதேச செயலாளர் பிரிவு உருவாகும்போது கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி எனும் முஸ்லிம் பிரதேச செயலகப் பிரிவிலிருந்து 05 கிராம அலுவலர் பிரிவுகளும் சுமார் 155 சதுர கிலோமீற்றர் (38,285 ஏக்கர்) எடுக்கப்படுகிறது.

அதேநேரம், கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து 13 கிராம அலுவலர் பிரிவுகளும் 686 சதுர கிலோமீற்றர் (169,442 ஏக்கர்) நிலப்பரப்பு தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டு 2002இல் கோறளைப்பற்று தெற்கு - கிரான் பிரதேச செயலாளர் பிரிவு உருவாக்கப்படுகிறது.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்திற்கு கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலிருந்து வாழைச்சேனை 206, வாழைச்சேனை 206பி, வாழைச்சேனை 206டி, பிறைந்துரைச்சேனை 206ஏ பிறைந்துரைச்சேனை 206சி மாவடிச்சேனை 208ஏ, செம்மண்ணோடை 208டி ஆகிய 7 கிராம அலுவலர் பிரிவுகள் இணைப்புச் செய்யப்படுகின்றன.

கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகத்தின் கீழ் இருந்த தியாவட்டவான் 210சி எனும் கிராம அலுவலர் பிரிவையும் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்துடன் இணைப்பதாக பனம்பலான ஆணைக்குழு சிபார்சு செய்தது.

அதேவேளை, கோறளைப்பற்று வடக்கு எனும் வாகரை தமிழ் பிரதேச செயலகப் பிரிவிலிருந்து புணானை கிழக்கு 211பி எனும் 128 சதுகிலோமீற்றர் (31616 ஏக்கர்) பரப்பளவு கொண்ட கிராம அலுவலர் பிரிவையும், புதிதாக உருவாக்குவதற்குப் பரிந்துரைக்கப்பட்ட ரிதீதென்ன 211எச் மற்றும் காரமுனை 211ஜி-2 எனும் 104 சதுர கிலோமீற்றர் பரப்பளவு (25688 ஏக்கர்) கொண்ட கிராம அலுவலர் பிரிவுகளையும் சேர்த்து கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவு உருவாக்கப்பட்டது. கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவின் மொத்த சனத்தொகை  24,647.

பனம்பலான ஆணைக்குழுவினால் நாட்டில் உருவாக்கப்பட்ட 08 பிரதேச செயலகங்களில் 07 பிரதேச செயலகங்கள் அந்த ஆணைக்குழுவின் சிபார்சு மற்றும் அமைச்சரவைத் தீர்மானத்தில் கிடைக்கப்பெற்ற அங்கீகாரத்தின் அடிப்படையில் நிலப்பரப்பு மற்றும் கிராம அலுவலர் பிரிவுகளுடன் உறுதிப்படுத்தப்பட்டு இன்றளவும் இயங்கி வருகின்றன.

ஆனால், கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம் மாத்திரம் பனம்பலான ஆணைக்குழு மற்றும் அமைச்சரவை அங்கீகாரத்திற்கு ஏற்ப வழங்கப்பட்ட 240 சதுர கிலோமீற்றர் பரப்பளவு மற்றும் கிராம அலுவலர் பிரிவுகளும் இதுவரையில் நில அளவை செய்யப்படாமலும், எல்லை நிர்ணயம் செய்யப்படாமலும் உள்ளது.

மேற்படி கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம் அது தன்னகத்தே கொண்டுள்ள 24647 பேரைக் கொண்ட சனத்தொகையுடன் 11 கிராம அலுவலர் பிரிவுகளையும் 240 சதுர கிலோமீற்றர் பரப்பளவையும் கொண்டதாக உருவாக்கப்பட வேண்டுமென பனம்பலான ஆணைக்குழு சிபார்சு செய்திருந்தது.

அமைச்சரவை அங்கீகாரம்

பனம்பலான ஆணைக்குழுவின் சிபார்சுக்கமைய, 2000.07.13ம் திகதி அமைச்சரவைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்திறகு அமைவாக 2002.05.24ம் திகதி கோறளைப்பற்று மத்தி மற்றும் கோறளைப்பற்று தெற்கு  கிரான் ஆகிய பிரதேச செயலகங்கள் திறந்து வைக்கப்பட்டன.

வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்படாமையினால் தோன்றியுள்ள நிருவாக முரண்பாடுகள்

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்திற்கென பரிந்துரைக்கப்பட்ட 11 கிராம அலுவலர் பிரிவுகளில் 08 கிராம அலுவலர் பிரிவுகளை மாத்திரம் இணைப்புச் செய்து 2002.05.24ம் திகதி இப்பிரதேச செயலகம் திறந்து வைக்கப்பட்டது. இந்த 8 கிராம அலுவலர் பிரிவுகளும் சுமார் 12 சதுர கிலோமீற்றர் பரப்பளவினை மாத்திரமே கொண்டமைந்துள்ளன.

கோறளைப்பற்று வடக்கு  வாகரை பிரதேச செயலகத்தின் அதிகாரப் பரப்பிலிருந்து இணைப்புச் செய்யப்படவேண்டிய 3 கிராம அலுவலர் பிரிவுகளும் இதுவரையிலும் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்துடன் இணைப்புச் செய்யப்படவில்லை.

அதேவேளை, பனம்பலான ஆணைக்குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட புதிய கிராம அலுவலர் பிரிவுகளான புணானை கிழக்கு 211பி, ரிதிதென்ன 211எச், காரமுனை ஜி-2 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் நில அளவை செய்யப்பட்டு வர்த்தமானி அறிவித்தலும் விடுக்கப்படவில்லை.

இருப்பினும், புணானை கிழக்கு 211பி கிராம அலுவலர் பிரிவின் ஒரு பகுதி தற்காலிமாக, நிலத் தொடர்பற்ற வகையில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்துடன் இணைக்கப்பட்டு நிருவகிக்கப்படுகின்றது.

அதேவேளை, வர்த்தமானி மூலம் அறிவித்தல் விடுக்கப்பட்ட கிராம அலுவலர் பிரிவு எல்லைகள் யுத்த காலத்தில் சட்ட ரீதியற்ற முறையிலும் நில அளவைத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு முரணாகவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

கோரிக்கைகள்.

வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய இந்தக் கிராமங்களின் எல்லைகள் அமைதல் வேண்டும்.

வாழைச்சேனையைக் குறுக்கறுக்கும் மாதுறு ஓயாவின் கிளை ஆறு, வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து தியாவட்டவான் வரையுமான நீர் வளம் என்பன சட்டரீதியாக கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தின் கீழ் வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்படல் வேண்டும்.

ஏற்கனவே பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மூலம் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தினை வர்த்தமானி அறிவித்தல் விடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அவை மட்டக்களப்பு மாவட்ட தமிழ் சமூக நிருவாகத்தினால் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

இறுதியாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் 2012ம் ஆண்டில் நியமிக்கப்பட்ட எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கையிலும் பனம்பலான ஆணைக்குழுவின் சிபார்சினை முழுமையாக ஏற்று அரசாங்கத்திடம் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், இவ்விதந்துரைகள் இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்படாமையால் தோன்றியுள்ள பிரச்சினைகள்

நிருவாக இலகுபடுத்தல் கொள்கையில் உருவாக்கப்பட்ட கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம் தியவட்டவான் கிராமத்தில் அமைந்துள்ளது.

இக்கிராமத்திற்கு அருகிலுள்ள கேணிநகர், ஆலங்குளம், வட்டவான், நாவலடி ஆகிய கிராமங்களில் வாழும் பொதுமக்கள் சுமார் ஒரு கிலோமீற்றர் தூரம் பயணம் செய்து தமக்கான சேவைகளைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பிருந்தும் அவர்கள் சுமார் 40 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்து வாகரையில் அமைந்துள்ள கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்தில் தமக்கான சேவைகளைப் பெற்றுக் கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

தமது பிரதேச செயலக நிருவாக கருமங்களுக்காக சுமார் 01 கிலோமீற்றர் தூரமுடைய கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்திற்குச் செல்ல முடியாது, சுமார் 40 கிலோமீற்றர் தூ ரத்திலுள்ள வாகரைப் பிரதேச செயலகத்துக்குச் சென்று சேவைகளைப் பெறவேண்டியிருப்பது மிகுந்த கஸ்டத்தையும், அதிக செலவினத்தையும், மன உளைச்சலையும் நேர விரயத்தையும் பொதுமக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை, ரிதிதென்ன கிராமத்திலிருந்து கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம் சுமார் 22 கிலோ மீற்றர் தூ ர இடைவெளியிலேயே அமைந்துள்ளது.

ரிதிதென்ன முஸ்லிம் கிராமவாசி ஒருவர் சேவையொன்றைப் பெற அருகிலுள்ள கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தினைக் கடந்து, சுமார் 70 கிலோ மீற்றர் பயணம் செய்து வாகரையிலுள்ள தமிழ்ப் பிரதேச செயலகத்திற்குச் சென்று சேவையினைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது.

இதன்மூலம் தமது அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதாகவும் இப்பிரதேச மக்கள் பல தடவைகளில் அதிகாரிகளிடத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆனால் பொதுமக்களின் எந்த வித சிரமத்தையும் தமிழ் சமூக அதிகாரிகளைக் கொண்ட மாவட்ட செயலக நிருவாகம் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தின் 12 சதுர கிலோமீற்றர் பரப்புக்குள் வசிக்கின்ற சுமார் 35,000 மக்கள், அடர்த்தியான குடியிருப்புக்கள் காரணமாக மிகுந்த இடநெருக்கடி மற்றும் பாரிய சுற்றாடல், சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

நாளாந்தம் சேரும் குப்பை கூளங்களை புதைப்பதற்குக் கூட போதிய இடவசதியில்லாமல் அவர்கள் அவஸ்தையுறுகின்றனர்.

குடிநீர் மாசடைந்து வருகின்றது. தொற்றுநோய்கள் பாரிய அச்சுறுத்தலாக உள்ளன.

அத்துடன் பொது வசதிகள், பொழுதுபோக்கு மையங்கள் போன்றவற்றை ஏற்படுத்த இட வசதியின்மையாலும் பிரதேச மக்கள் - குறிப்பாக இளந்தலைமுறையினர் உடல், உள ரீதியாக ஆரோக்கியமற்ற நிலையிலும் மன அழுத்தத்துடனும் வாழ வேண்டியிருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

மேலும் அபிவிருத்திக்கான நிலப்பற்றாக்குறை மற்றும் இட வசதிப் பற்றாக்குறையால் வீடு, காணிகளின் விலைகளும் கட்டுப்பாடற்று அதிகரித்துச் செல்வதும் பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

எனவே அமைச்சரவைத் தீர்மானத்தின்படி கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம், அதற்குரித்தான 240 சதுர கிலோமீற்றர் பரப்பளவுடன் சட்டபூர்வமாக இயங்குவதற்கும் நில அளவை செய்து வர்த்தமானி அறிவித்தல் விடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இன நல்லிணக்கம், சமூக உரிமைகள், சுமுகமான நிருவாகம், சிவில் உரிமை என்பனவற்றைப் பேணுவதற்கும் அப்பிரதேச மக்களின் கோரிக்கையை பரிசீலித்து, பிரதேச மக்களுக்குச் சாதகமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# இழுத்தடிக்கும் நயீமுள்ளாஹ்; - றிஷாட் எம்.பி. குற்றச்சாட்டு



புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்றி ரஹீமை - முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பிலிருந்து நீக்குமாறு, தேர்தல் ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமது கட்சி கோரிக்கை விடுத்த போதிலும், அதனைச் செய்யாமல் முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் எம். நயீமுல்லா இழுத்தடித்து வருவதாக, அகில இலங்கை மக்கள் காங்கிஸ் தலைவர் றிசாட் பதியுதீன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் 16ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

புத்தளம் மாவட்டத்தில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது - அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வேட்பாளர்களும், முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர்களும் ஒன்றிணைந்து, முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் “தராசு“ சின்னத்தில் போட்டியிட்டனர்.

அந்தத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக - தராசு சின்னத்தில் களமிறக்கிய அலி சப்றி ரஹீம், நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றிபெற்றார்.

இதன் பின்னர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் முடிவுகளுக்குக் கட்டுப்படாமல், நாடாளுமன்றத்தில் அலி சப்றி ரஹீம் - பல சந்தர்ப்பங்களில் தன்னிச்சையாக செயற்பட்டு வந்தார். இதனால் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தது.

இந்தக் காலகட்டத்தில் வெளிநாட்டிலிருந்து தங்கம் கடத்தி வந்த அலி சப்றி ரஹீம், விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். பின்னர் அபராதம் விதிக்கப்பட்டு, தங்கமும் பறிமுதல் செய்யப்பட்ட நிலையில் விடுதலையானார்.

இதனையடுத்து அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை தீவிரப்படுத்திய அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், அவரை கட்சியில் இருந்து நீக்கியது.

இதனைத் தொடர்ந்து, தேர்தல் ஒப்பந்தத்தில் பொருந்திக் கொண்டபடி - தமது கட்சியிலிருந்து நீக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்றி ரஹீமை, முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பிலிருந்தும் நீக்குமாறு, அந்தக் கட்சியின் செயலாளர் எம். நயீமுல்லாவுக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் எழுத்து மூலம் அறிவித்தது. ஆனால் இதுவரையில் முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பிலிருந்து அலி சப்றி ரஹீம் நீக்கப்படவில்லை என, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் றிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

”முஸ்லிம் தேசியக் கூட்டமைப்புடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தேர்தல் ஒப்பந்தமொன்று செய்துள்ளது. எமது கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஒருவர் - எங்கள் கட்சியின் அங்கத்துவத்திலிருந்து நீக்கப்பட்டால், முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பும் அந்த நபரை - கட்சி அங்கத்துவத்திலிருந்து நீக்க வேண்டும்” என றிசாட் பதிதீன் கூறினார்.

”அலி சப்றி ரஹீமை எமது கட்சியில் இருந்து நீக்கிமை தொடர்பான கடிதத்தை, முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நயீமுல்லாவை அழைத்து அவர் கையில் கொடுத்தோம். அதனைப் பெற்றுக் கொண்டமை தொடர்பில் அவர் கையெழுத்திட்டுள்ளார். ஆனால், பல வாரங்கள் ஆகியும், முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் உறுப்புரிமையிலிருந்து அலி சப்றி ரஹீம் நீக்கப்படவில்லை.

இது தொடர்பில் பேசுவதற்காக நயீமுல்லாவின் தொலைபேசியை பல தடவை அழைத்தோம் - அவர் பதிலளிக்கவில்லை. அவரின் வீட்டுக்கும் தேடிச் சென்றோம். அங்கு அவர் இல்லை என பதிலளிக்கப்பட்டது. இதனையடுத்தே இந்த ஊடக சந்திப்பை நாம் நடத்துகின்றோம்” என, றிசாட் குறிப்பிட்டார்.

முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நயீமுல்லா என்பவர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரஊப் ஹக்கீமுடைய மைத்துனர் (மாமி மகன்) என்பது குறிப்பிடத்தக்கது. முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடத்திலும் நயீமுல்லா உறுப்பினராக உள்ளார்.

மேலும், ரஊப் ஹக்கீம் அமைச்சராக பதவி வகித்த அதிகமான சந்தர்ப்பங்களில், அவரின் பிரத்தியேக செயலாளராகவும் - நயீமுல்லாதான் பதவி வகித்து வந்துள்ளார்.

இந்த ஊடக சந்திப்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தவிசாளர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி, அந்தக் கட்சியின் செயலாளர் எஸ். சுபைதீன் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

# அரசியல் ஆதாயம் தேடும் முயற்சியே இது!

## ஐ.தே.கூட்டமைப்பின் செயலாளர் நயீமுல்லாஹ் காட்டம்

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் மீதான ஒழுக்காற்று நடவடிக்கை சம்பந்தமாக விளக்கமளிக்கும் நோக்கில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் நேற்று மாலை (16) ஊடக சந்திப்பொன்றை நடத்தியிருந்தது. அதன்போது அக்கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுத்தீன் அவர்களால் முன்வைக்கப்பட்ட சில கருத்துக்கள் தொடர்பில் விளக்கமளிக்க ஐக்கிய தேசிய கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் என்ற வகையில் நான் நிர்பந்திக்கப்பட்டுள்ளேன் - என ஐக்கிய தேசிய கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் மஸீஹுத்தீன் நயீமுல்லாஹ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

2020ம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது புத்தளம் மாவட்டத்துக்கான முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளும் எமது கட்சியான முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் (தற்போதைய ஐக்கிய தேசிய கூட்டமைப்பு) தராசு சின்னத்தில் வேட்பாளர்களை நிறுத்தி ஒரு கூட்டணியாக போட்டியிட்டது. அம் முயற்சியின் பயனாக மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக புத்தளம் மாவட்டம் இழந்திருந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வென்று கொள்ள முடிந்தமையும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட அலி சப்ரி ரஹீம் அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்று பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருதார் என்பதும் அனைவரும் அறிந்ததே.

தேர்தல் முடிந்து இரண்டு மாதங்களுக்குள் அன்றைய ஆட்சியாளர்களால் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பின் 20வது திருத்தச் சட்டமூலத்துக்கான வாக்கெடுப்பு நடைபெற்றது. கோவிட்19 நோய்த் தொற்றின் காரணமாக உயிரிழந்த முஸ்லிம் ஜனாசாக்களை தயவு தாட்சண்யம் இன்றி தகனம் செய்யப்படுவதற்கு எதிராக நாட்டில் வாழும் அனைத்து முஸ்லிம்களும் அன்றைய அரசாங்கத்துக்கு பலத்த கண்டனங்களை தெரிவித்துக் கொண்டிருந்த வேளையிலும் அவர்களால் கொண்டுவரப்பட்ட சர்ச்சைக்குரிய 20வது திருத்தத்துக்கு ஆதரவாகவும் தனது கட்சியின் தீர்மானத்துக்கு எதிராகவும் குறித்த பாராளுமன்ற உறுப்பினர் வாக்களித்திருந்தார். அவ்வாறு செயற்பட்ட அப் பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என முழு முஸ்லிம் சமூகமும் பலத்த எதிரபார்ப்புடன் இருந்தது.

ஆனால், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தனது கட்சியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக மேற்கொண்டதை போன்ற முறையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் தமது புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மீது மேற்கொள்ள தவறியிருந்தது.. அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்து விட்டால் இரண்டாவது அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்றிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் புத்தளம் நகர பிதா மர்ஹூம் கே.ஏ. பாயிஸ் பாராளுமன்ற உறுப்பினராக வந்து விடலாம் என்ற காரணத்தினால் அவர் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாது தட்டிக் கழிக்க பட்டிருக்கலாம். ஆனால் இன்று தங்கம் கடத்தல் குற்றச்சாட்டின் பேரில் அவரை கட்சியிலிருந்து நீக்க அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

மேற்படி ஒழுக்காற்று நடவடிக்கைகளில் எந்த விதத்திலும் தொடர்பு படாத ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமையும் அவர் சாடியுள்ளது மொட்டை தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் முயற்சியாகும். இதன்மூலம் தனது தனிப்பட்ட அரசியல் கோபதாபங்களையும் தீர்த்துக்கொள்ள முனைகிறார் என்பதனையே அவரது கருத்துக்களிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

2020 பொதுத் தேர்தலக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் இறுதி நாளுக்கு இரண்டொரு தினங்களுக்கு முன்னதாகத்தான் எமது கட்சியின் தராசு சின்னத்தின் கீழ் கூட்டணியாக போட்டியிடும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. நியமனப் பத்திரத்தினை தாக்கல் செய்வதற்காக புத்தளம் செல்வதற்கு முன்தினம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் என்னை தொடர்பு கொண்டு எமது கட்சியுடன் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையை கைச்சாத்திட்டுக் கொள்ள வேண்டும் என கூறினார். அதன்படி அவர்களினாலேயே அவ்வுடன்படிக்கையும் தயாரிக்கப்பட்டிருந்தது. நான் அவர்களது காரியாலயத்துக்கு சென்று அதில் கையொப்பமிட்டேன். வெறுமனே இரண்டு பக்கங்களை கொண்டதும், வேட்பாளர்களது பெயர்கள் குறிப்பிடப்படாததுமான ஒரு உடன்படிக்கையையே அவர்கள் எனது கையொப்பத்துக்காக சமர்ப்பித்தார்கள். அந்த புரிந்துணர்வு உடன்படிக்கையை சரியான முறையில் தாயரித்து மீண்டும் அதில் கையொப்பமிட ஏற்பாடு செய்யுமாறு இரு வேறு சந்தர்ப்பங்களில் அக் கட்சியின் தலைவர் மற்றும் தவிசாளர் ஆகியோரிடம் நான் கேட்டுக்கொண்டேன். ஆனால் இன்றுவரை அவர்கள் அதனை பொருட்படுத்தாது காலம் கடத்திவிட்டு அவ் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிராத சில விடயங்களை அதில் குறிப்பிடப்பட்டிருந்ததாக கூறி அவற்றை நான் மீறிவிட்டதாக நேற்றைய தினம் (16) என் மீது அபாண்டமாக குற்றம் சாட்டியுள்ளனர்.

அலி சப்ரி ரஹீம் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்படும் பட்சத்தில் அவ்வெற்றிடத்தை நிறப்புவதற்காக அடுத்த நிலையிலுள்ள வேட்பாளர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளைச் சாராத நேரடி ஐக்கிய தேசிய கூட்டமைப்பு உறுப்பினராகவே கருதப்பட வேண்டியவராக இருந்தார். ஆனால், இவ்வருட ஆரம்பத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களுக்கான நியமனப்பத்திரங்கள் கோரப்பட்டபோது அவர் பிறிதொரு கட்சியில் இணைந்து கல்பிட்டி பிரதேச சபைக்கான வேட்பாளராக போட்டியிட அக்கட்சியின் நியமனப் பத்திரத்தில் கையொப்பமிட்டுளளதாக எமது கட்சிக்கு தகவல் கிடைத்தது. தேர்தல் ஆணையகத்தில் அதனை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் அவரிடமிருந்து அதற்கான விளக்கமொன்றை பெற்றுக் கொள்ள எமது கட்சி தீர்மானித்து அதற்கான விளக்கத்தினை 14 நாட்களுக்குள்ளாக எமக்கு அனுப்பி வைக்கும்படி கடிதம் அனுப்பப்பட்டது. அதேவேளை அந்த வேட்பாளர் மீண்டும் கட்சி மாறி அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இணைத்துக் கொள்ளப்பட்டதாக மற்றொரு தகவலும் கிடைக்கப்பெற்றிருந்தது.

ஒரே கூட்டணியில் இருந்து கொண்டு தமது கட்சியைச் சாராத அடுத்த நிலையிலுள்ள வேட்பாளர்களை தன்னிச்சையாக தமது கட்சிக்குள் இணைத்துக் கொள்வதும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் சொல்வதைப்போல புரிந்துணர்வை மீறும் செயல்தான் என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு கட்சி மாறிய வேட்பாளருக்கு நாம் அனுப்பியிருந்த விளக்கம் கோரலுக்கான பதில் கடிதத்தில், அவர் கூட்டணியிலுள்ள எந்தக் கட்சியையும் சாராதவர் எனவும் தான் ஒருபோதும் எமது கட்சியில் அங்கத்தராக இணைந்து கொள்ளவில்லை எனவும் கூறியுள்ளதோடு எனவே, அவர் மீது நடவடிக்கை மேற்கொள்ள எமது கட்சிக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக நியமனம் பெறும் பட்சத்தில் எந்தவொரு கட்சிக்கும் கட்டுப்படாத தன்னிச்சையாக செயற்படும் ஒரு உறுப்பினராகவே இருப்பார். ஆகவே, அவ் வேட்பாளருடனும் அவரை எமது கூட்டணிக்குள் இணைப்பதற்கு காரணமாக இருந்த புத்தளம் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடனும் கலந்தாலோசித்து அவரை எமது கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும் தீர்மானித்திருந்தோம்.

எனவே, எமது கட்சி முகம் கொடுக்கவுள்ள சில பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளும் பொருட்டு அலி சப்ரி ரஹீம் எம்.பி. தொடர்பிலான விசாரனைகளின் முடிவினை இரண்டு வாரங்களுக்கு தாமதிக்குமாறும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. எமது வேண்டுகோளை புறந்தள்ளிவிட்டு அடுத்த நாளே அவரை கட்சியிலிருந்து விளக்கும் தீர்மானத்தினை நிறைவேற்றி, ஒரு முக்கிய அலுவல் காரணமாக கொழும்புக்கு வெளியில் சென்றிருந்த என்னை உடனடியாக கொழும்புக்கு அழைத்து கடந்த நவம்பர் 5ம் திகதி இரவு அக்கடிதம் என்னிடம் கையளிக்கப்பட்டது. அக்கடிதத்தின் பிரதி அலி சப்ரி ரஹீம் ரஹீம் எம்.பி.க்கு அனுப்பப்பட்டதாகவம் கூறப்பட்டதோடு அவரை பாராளுமன்ற பதவியில் இருந்து நீக்குவதற்கான எமது கடிதத்தை உடனடியாகவே அகில இலங்கை மக்கள் காங்கிரஸிடம் ஒப்படைக்குமாறும் வலியுறுத்தப்பட்டது.

ஒரு கட்சியின் செயலாளர் என்ற வகையில் எனது கட்சியின் உயர்பீட உறுப்பினர்களது அங்கீகாரத்தை பெற வேண்டியுள்ளதன் அவசியத்தை அவர்களுக்கு தெளிவுபடுத்திய போதும் அதற்கு அவர்கள் உடன்படவில்லை. ஏற்கனவே கட்சியின் உயர்பீடம் மூலம் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளும் இருக்கின்ற போது நான் தனியாளாக எந்தத் தீர்மானத்தையும் மேற்கொள்ள முடியாத நிலையிலிருந்தேன். எனவே அதற்கான கால அவகாசம் எனக்கு வழங்கப்பட வேண்டும் என அறிவித்து விட்டு வந்தேன். என்றாலும் அவர்களோ தமது கட்சிக்கு புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட வேட்பாளரை தம்முடன் தக்கவைத்துக் கொள்வதிலேயே குறியாக இருந்ததாக ஊகிக்க முடிந்தது. எமது வேண்டுகோளுக்கிணங்க கால அவகாசம் வழங்குவதை அவர்கள் வேண்டுமென்றே தவிர்த்துக் கொண்டதாகவே நாம் கருதுகிறோம்.

அதே தினம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மூலம் தமது தீர்மானம் ஊடகங்களுக்கும் பகிரங்கப் படுத்தப்பட்டிருந்தது. பல்வேறு ஊடகங்களும் என்னைத் தொடர்பு கொண்டு மேற்படி ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பில் எனது கருத்தை அறிய முற்பட்டன. இரண்டு கட்சிகளுக்கு இடையே ஏற்பட்ட உள்ளக முரண்பாட்டை சந்திக்கு கொண்டு வந்து அதன் மூலம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரையோ ஏனைய அங்கத்தவர்களையோ விமர்சிப்பதை நான் நாகரீகமாக கருதவில்லை. எனவே நான் அலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிப்பதை சில நாட்களாக தவிர்த்து வந்தேன்.

இதற்கிடையில்தான் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் இந்த தீர்மானத்தை



நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை (13) அலி சப்ரி ரஹீம் எம்.பி. யினால் இடைக்கால தடை உத்தரவு பெறப்பட்டுள்ளதாக எனக்கு அறிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் (15) என்னை தொடர்பு கொண்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதி செயலாளர் நாயகம் இந்த வழங்கு விடயத்தில் நாம் அவர்களது கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அது விடயமாக எமது ஒத்துழைப்பை வழங்க நாம் தயாராக உள்ளதாகவும், நேற்று காலை (16) நாம் சந்தித்து அது பற்றி கதைப்போம் எனவும் உறுதியளித்திருந்தேன். அதனை அவரது கட்சித் தலைவருக்கு எத்தி வைத்ததாகவும் அவர் எனக்கு தெரிவித்தார். இவ்வாறான தொலைபேசி உரையாடல்கள் நடந்தும் நேரில் சந்திப்பதற்கான காலமும் குறிக்கப்பட்டிருந்த நிலையிலும் நேற்றைய தினம் மாலைவரை நான் தொலைபேசிக்கு பதிலளிக்காது தவிர்ந்து வருவதாகவும் அதன்மூலம் அலி சப்ரி ரஹீம் எம்.பி. மாவட்ட நீதிமன்றம் செல்வதற்காக நான் உதவி செய்ததாகவும் என்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தான் செய்த தகடுதத்தங்களை மறைப்பதிலும் கூட சிறு பிள்ளைதனமாக அரசியல் ஆதாயம் தேடுகின்ற முயற்சியாகவே நான் இதனை கருதுகிறேன். ஒழுக்காற்று நடவடிக்கைகள் சம்பந்தமான வழக்குகளில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்'க்கு ஒத்துழைப்பு வழங்குவதாக அறிவிக்கப்பட்ட நிலையிலும் அவர் இவ்வாறு நடந்து கொள்வதையிட்டு வருந்துகிறேன்.

அடுத்த கட்சிகளிலிருந்து உறுப்பினர்களை காவுகொண்டு தனது கட்சியை வளர்க்கும் முயற்சியையும் கட்சிகளுக்கு இடையிலான சில்லறை பிரச்சினைகளை பாரியதொரு சமூகப் பிரச்சினையாக மக்கள் மயப்படுத்த முனையும் வழமையையும் இனியாவது அவர் தவிர்ந்து கொள்வதே நல்லது.

## மனநலமும் ஆலோசனையும் 06

# உயர்வு தரும் உள் அமைதி

"சீக்கிரம்! சீக்கிரம்!"
"இப்போதே செயல்படுங்கள்!"
"விரைவாக நகர்த்துங்கள்"
"நீங்கள் அவசரப்படாவிட்டால் தவறவிடுவீர்கள்"

இப்படியான வார்த்தைகள் அடிக்கடி பேசப்படுவதை காண்கிறோம். வீட்டில், வகுப்பறையில், பணியிடத்தில் என்று எங்கு வேண்டுமோனாலும் இதுபோன்ற வார்த்தைகள் தாராளமாக பயன்படுத்தப்படுகின்றன. இந்த வார்த்தைகளுக்குள் ஒரு இனம்புரியாத வேகம், ஒரு அவசரம் இருப்பதை நாம் யாரும் மறுக்கமாட்டோம்.

ஆனாலும் நாங்கள் அவசரத்தை விரும்புவதில்லை. மனிதர்கள் இயல்பாகவே அமைதியை விரும்பக்கூடியவர்கள். மனித மூளையும் அமைதியை விரும்புகிறது. அவசரப்படாமல் செயற்படுவதே எங்கள் எல்லோரினதும் குறிக்கோள். அவசரம் எங்களை கண் தெரியாத இடத்தில் வழுக்கி விழ வைத்து விடும் என்பதை நாம் இப்போது நன்றாக தெரிந்த வைத்திருக்கிறோம்.

முயலின் பயணத்தை போல எங்கள் பயணம் இருக்காமல் அமைதியைக் கடைப்பிடித்து நிதானமாக பயணிப்பது தான் சிறந்த முடிவுகளை தரும் பயணமாக இருக்கும் என்றும் நாம் புரிந்திருக்கிறோம். அப்படியானால் எம் வாழ்க்கையை நிதானமாகவும் சமநிலையாகவும் வைத்துக்கொள்ளவே நாம் ஒவ்வொருவரும் ஆசைப்படுகிறோம். அதற்கு உதவும் முக்கியமானதொரு கருவி அமைதி என்பதாகும்.

அமைதியை எம்முடன் இணைத்துக் கொண்டால் அவசரம் எம்மை விட்டு தொலைதூரம் போய்விடும்.

அமைதியை கடைப்பிடிப்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல என்பது எமக்குத் தெரியும். ஆனால் நம் சொந்த நலனுக்காக, அழகான, ஆரோக்கியமான வாழ்க்கைக்காக அதை எல்லா நேரங்களிலும் எம்மோடு சேர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் எமக்குள் ஒரு உள்ளார்ந்த அமைதியை உருவாக்கிக் கொள்ள வேண்டும். உள்ளார்ந்த அமைதி என்பது ஒரு மிகப் பெரிய அருள். அது எவருக்கு இருக்கும்மோ அவர் எதிலும் நிறைவையும் மகிழ்ச்சியையும் அனுபவிக்கும் உயர்ந்த மனிதராக இருப்பார். நம்மில் அதிகமானோர் இந்த உள்ளார்ந்த அமைதி இல்லாதவர்களாகவே வாழ்கிறார்கள். நாம் முதலில் நமக்குள் அமைதியை மேம்படுத்தத் தொடங்க வேண்டும். அதன் பின்னர் நம் குடும்பத்தினர், அதன் பின்னர் எம்முடைய சமூகத்திடம் அமைதியை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். எம் உள்ளத்தில் எவ்வளவுக்கு உள்ளமைதி அல்லது உள்ளார்ந்த அமைதி இருக்குமோ அவ்வளவுக்கு எமது நடத்தைகள் அழகாக, ஆக்கப்பூர்வமாக, அமைதியாக வெளிப்பட ஆரம்பிக்கும்.

"ஒரு முறை ஒரு விவசாயி தனது கடிகாரத்தை வயல்லோர கமத்தில் தொலைத்து விட்டார்.

அது சாதாரண கடிகாரம் அல்ல. அது அவருக்கு உணர்ச்சிகரமான மதிப்பைக் கொடுத்துவந்த கடிகாரம். அதை எப்படியாவது கண்டெடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் நீண்ட நேரம் வைக்கோல் மத்தியில் தேடிப்பார்த்தார். ஆனால் அது அவருக்கு கிடைக்கவில்லை. தனது நீண்ட நேர முயற்சியை அவர் கைவிட்டுவிட்டு கமத்தைக்கு வெளியே விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களின் உதவியை நாடினார்.

அதை கண்டுபிடித்துத் தருபவருக்கு சன்மானம் வழங்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

இதைக் கேட்ட சிறுவர்கள் வைக்கோல் நிறைந்த கமத்தைக்கு விரைந்தனர், குவியலாக இருந்த வைக்கோல் முழுவதையும் சுற்றிப் பார்த்தார்கள், புரட்டிப் பார்த்தார்கள். ஆனால் அவர்களாலும் கடிகாரத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

விவசாயி தனது கைக்கடிகாரத்தைத் தேடுவதை கைவிடத் தயாராக இருந்தபோது, ஒரு சிறுவன் அவரிடம் சென்று மற்றொரு வாய்ப்பு தருமாறு பணிவாக கேட்டான்.

விவசாயி அவனைப் பார்த்து, "ஏன் தரமாட்டேன்..! எல்லாவற்றிற்கும் மேலாக, "நீ மிகவும் நேர்மையாகத் தெரிகிறாய்." என்று சொல்லி சிறுவனை கமத்தைக்குள் அனுப்பினார்.

சிறிது நேரத்தில் சிறுவன் கையில் கடிகாரத்துடன் வெளியே வந்தான்! விவசாயி மகிழ்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தார், மற்றவர்கள் அனைவரும் தோல்வியுற்ற இடத்தில் உன்னால் எப்படி வெற்றி பெறமுடிந்தது என்று விவசாயி சிறுவனிடம் கேட்டார்.

அதற்கு சிறுவன், "நான் தரையில் உட்கார்ந்து அமைதியாக இருப்பதைத் தவிர வேறு எதுவும் செய்யவில்லை. அந்த அமைதியின் நிசப்தத்தில் கடிகாரத்தின் டிக் சத்தம் கேட்டு அந்த திசையில் அதை தேடினேன்." என்று ஆறுதலாக பதில் தந்தான்."

இந்தக் கதை மிகப் பெரியதொரு உண்மையை எமக்குக் கற்றுத் தருகிறது. அவசர அவசரமாக வேலை செய்யும் மனதை விட அமைதியான மனதால் சிறப்பாக சிந்திக்க முடியும் என்பதுதான் அந்தப் பாடம்.

இப்போது நாம் எங்களை கேட்டுப் பார்ப்போம்....! நாம் இந்தச் சிறுவனைப் போன்று எப்போதாவது அமைதியின் ஒலியை அனுபவித்து இருக்கிறோமா? நிசப்தம் இல்லாத மனதுடன் வாழ்ந்திருக்கிறோமா?

ஒவ்வொரு நாளும் எங்கள் மனதுக்கு சில நிமிட அமைதியை அனுபவிக்க அனுமதி வழங்குவோம். அமைதியின் சுகத்தை சுவைத்துப் பார்க்க வாழ்க்கையின் சில நிமிடங்களை ஆசையோடு அர்ப்பணிப்போம்.

எங்கள் வாழ்க்கையை நாங்கள் எதிர்பார்க்கும் விதத்தில் அமைத்துக் கொள்ள அமைதியின் அரவணைப்பில் கொஞ்சம் சுகம் காண்போம்.

சமூகத்தில் இருந்து அவ்வப்போது மாறி மாறி வரும் அனைத்து தடைகளிலிருந்தும் நாம் சுதந்திரம் பெறக்கூடிய ஒரே இடம் அமைதி. இந்த அமைதியை கொஞ்ச நேரம் தனிமையில் இருந்து அனுபவிக்கப் பழகினால் அது இடைவிடாமல் எம்மை வடிவமைத்துக் கொண்டே இருக்கும்....!



**அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)**
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# அல் அஸ்ஹர் மாணவியின் சாதனை

YMMA சங்கத்தினால் நடாத்தப்பட்ட 2023 ஆம் வருடத்திற்கான மிலாதுன் நபி விழா கட்டுரை போட்டியில் அல் அஸ்ஹர் கல்லூரியில் தரம் 9 இல் கல்வி பயிலும் மாணவி ஆசுரு சுரணயெ கேகாலை மாவட்ட த்தில் முதலாம் இடைத்தை பெற்றுள்ளார்.

அத்துடன் அகில இலக்கை ரீதியில் 187 பாடசாலை களுடன் போட்டி யிட்டு தேசிய ரீதியில் இரண்டாமிடத்தை பெற்று ஹெம்மாத்தகம மண் ணுக்கும் எமது பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இவருக்கான பர்ஸில் களும் சான்றிதழும் லுஆஆயு தலைமை கா ரியாளத்தில் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இ ம்மாணவி கொடெகொடை ஜேமா த்தை சேர்த்த MSM Risvan,



MM Riskiya தம்பதிகளின் செல்வ புதல்வியாவர்.

இவரை நாமும் வாழ்த்தி கௌரவிப்பதோடு இவரது திரமைகல் மேலும் வளர பிரார்த்திக்கின்றோம்.

# கற்பிட்டி அல் - அக்ஸா தேசிய பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் 08பேர் சித்தி

**(எம்.எச்.எம் சியாஜ் – கற்பிட்டி )**

இவ்வருட நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் "கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையிலிருந்து" பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 08 பேர் சித்தியடைந்துள்ளனர்.

01. மொஹமட் அஸ்லம் அப்துல்லாஹ் யூசுப் - 166 புள்ளிகள்
02. நியாஸ்தீன் மொஹமட் நாசிப் - 165 புள்ளிகள்
03. சதாசிவம் நிதுஷா - 164 புள்ளிகள்
04. நிமின்ஷன் பெர்னாந்து சரண்யா - 153 புள்ளிகள்
05. மொஹமட் அஸ்கர் ஹம்றத் ஹபா -153 புள்ளிகள்
06. ஜெயதாசன் சென்றியா மிஸ்லி - 147 புள்ளிகள்
07. ஹபீப் றஹ்மான் மொஹமட் யூனூஸ் - 144 புள்ளிகள்
08. மொஹமட் ஹசான் பாத்திமா ஹயா - 144 புள்ளிகள்

என பெற்றுள்ளனர்.

இப் பாடசாலையின் அதிபர் முஸ்தபா அன்சார் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் அவர்களை வழிநாடத்திய ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

# அதிபருக்கான கௌரவிப்பு



புத்தளம் ஆப்தீன் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் கடந்த 13 வருடங்களாக, தரம் நிறைவேற்று அதிபராக செயலாற்றி வருகின்ற ஜனாப் எம்.எஸ். எம். மபாஹிர் அவர்கள், மட்டுப்படுத்தப்பட்ட அதிபர்-111 போட்டி பரீட்சையில் சித்தியடைந்து, அதற்கான நேர்முக பரீட்சை ஊடாக தேர்வு செய்யப்பட்டு அதிபர் நிமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த சந்தோசகரமான நிகழ்வினை முன்னிட்டு அதிபர் எம். எஸ். எம். மபாஹிர் அவர்களுக்கு அப்பாடசாலையின் ஆசிரியர் குழாத்தினால் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

**(கரீம் ஏ. மிஸ்காத்)**

**7ம் பக்கத் தொடர்ச்சி...**

அனைத்தும் குறைந்தபட்சம் 100 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும். அதன் அடிப்படையில் கூரகல பள்ளிவாசல் சம்பந்தமான பிரச்சினை 2015ஆம் ஆண்டுகளில் வரும் போது அந்தப் பள்ளிவாசல் கட்டப்பட்டிருப்பது 1922ஆம் ஆண்டில் என்பதால் அது தொல்பொருள் அல்ல என்ற நிலைப்பாட்டிற்கு தொல்பொருளியலாளர்கள் வந்ததாக தனது பெயரை குறிப்பிட விரும்பாத களனி பல்கலைக்கழகத்தின் தொல்லியல் முதுகலை நிறுவன விரிவுரையாளர் ஒருவர் கூறினார்.

அத்துடன் 2015 ஆம் ஆண்டு கல்தொட கூரகல ஆகிய பிரதேசங்களில் தொல்லியல் முதுகலை நிறுவனம் மேற்கொண்ட ஆய்வுகளின் பின்னர் வெளியிடப்பட்ட "முயடவழயெ ஊரசஎநல -"ாயனெ 1" நூலில் மிகவும் தெளிவாக கூரகல மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் காணப்படுகின்ற தொல்பொருள் ஆராய்ச்சிகள் மற்றும் அதன் முடிவுகள் பற்றி குறிப்பிடுகின்றது. குறிப்பாக 2012-13 ஆம் ஆண்டுகளில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சிகளின் போது ஜெய்லானி பள்ளிக்கு அருகாமையில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்பானது இன்றைக்கு 8000 வருடங்கள் பழைமையானது என கணிப்பு செய்யப்பட்டுள்ளதாக அந்த ஆராய்ச்சிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் தொல்பொருள் பெறுமதி வாய்ந்த பிரதேசமாக பெயரிடப்பட்டுள்ள எந்தவொரு இடத்திலும் புதிதாக எந்தவொரு கட்டுமானத்தையும் மேற்கொள்ள முடியாது என மிக தெளிவாக களனி பல்கலைக்கழகத்தின் தொல்லியல் முதுகலை நிறுவன பேராசிரியர் கூறினார். ஆகவே அங்கே புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மிகப்பெரிய விகாரையும் ஏனைய கட்டுமானங்களும் எவ்வாறு யாருடைய அனுமதியுடன் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணிப்புகள் என்பது மிகப்பெரிய ஒரு கேள்விக்குறி

**தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெற்றுக்கொண்ட தகவல்**

நாம் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் இலங்கை தொல்பொருள் திணைக்களத்திடம் கூரகல பிரதேசத்தின் வரலாறு பற்றி வினவி இருந்தோம். அதன் அடிப்படையில் பின்வரும் தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டது.

1971 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி 14970ஃ8 இலக்கத்தின் கீழ் விசேட வர்த்தமானி மூலம் இந்த கூரகல பிரதேசம் தொல்பொருள் இடமாக அறிவிக்கப்பட்டுள்ளது. 1971.03.12 திகதி 14987 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் கூரகல பிரதேசம் தொல்பொருள் திணைக்களத்தினால் பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 1971 ஆம் ஆண்டு கூரகல தொல்பொருள் திணைக்களம் பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னர் இலங்கை தொல்பொருள் திணைக்களம் கூரகல பிரதேசத்தை பாதுகாக்கும் பணியை ஆரம்பித்துள்ளது. 1972.03.09 அன்று அப்போதைய தொல்பொருள் திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளர் ராஜா டி சில்வா மும்மொழிகளிலும் பின்வருமாறு ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளார். தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் "கூரகல தொல்பொருள் உறுதிப்படுத்தல்" கூரகல பாதுகாப்பு ஆரம்பம் தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பழமையான ஆவணமும் இது என தொல்பொருள் திணைக்களம் குறிப்பிட்டது. அந்த அறிவிப்பில் அப்போதைய தொல்லியல் துறை ஆணையர், "புராதன நினைவுச் சின்னங்களை பாதுகாக்கும் கொள்கைக்கு இணங்க இலங்கை தொல்பொருள் திணைக்களம், மேற்கண்ட இடத்தில் உள்ள திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்ட காணிகளில் அழிந்து போன சின்னங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கின்றது. இங்கு புதிய புத்த தூபி ஒன்றினை கட்டுவதற்கான எந்த ஒரு உத்தேசமும் இல்லை. இந்த பாதுகாப்பு வேலைகளால் கூரகலயை தொழுகை இடமாக உபயோகிக்கும் முஸ்லிம்கள் பாதிக்கப்பட மாட்டார்கள் " என மிகவும் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொல்பொருள் கட்டளை சட்டத்தின் கீழ் தொல்பொருள் பழமை வாய்ந்த இடங்களில் எந்த ஒரு புதிய கட்ட நிர்மாணங்களையும் மேற்கொள்ள முடியாது. ஆனால் கூரகல மலையில் புதிதாக ஒரு விசாலமான விகாரை கட்டப்பட்டுள்ளதுடன் ஆண்டாண்டு காலமாக முஸ்லிம்கள் சென்று வந்த ஒரு பள்ளிவாசல் இடிபாடாக உள்ளது. முஸ்லிம்களுக்காக என மார்தட்டிக் கொள்ளும் எந்த ஒரு அரசியல்வாதியும் இதுவரை இதைப் பற்றி வாய் திறக்கவே இல்லை.

இலங்கை முஸ்லிம்களின் தொன்மையான வரலாறு ஒருபுறம் அழிக்கப்பட்டு வருகின்றது! முஸ்லிம்களின் இருப்பு மறுபுறம் மறுக்கப்பட்டு வருகின்றது! முஸ்லிம் இளைஞர்களின் கல்வியும் எதிர்காலமும் இன்னொரு புறம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது! இந்த அனைத்துக்கும் மத்தியில் முஸ்லிம்களுக்குள்ளேயே மதத்தை எவ்வாறு பின்பற்றுவது என்பது பற்றி மிகப்பெரிய ஒரு முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த கூரகல ஜெய்லானி பள்ளியின் இன்றைய அரசியலையும் எமது முஸ்லிம் சமூகம் அதனை காண்கின்ற விதத்தையும், 1937-ல் ஜெர்மனில் ஹிட்லரின் ஆட்சியை பற்றி மார்டின் நிமோலர் (ஆயசவைn Niநஅழடடநச) எழுதிய இந்த உலகப்புகழ் பெற்ற வரிகள் நினைவுபடுத்துகின்றது.

அவர்கள் முதலில் கம்யூனிஸ்ட்டுகளைத் தேடி வந்தார்கள்
நான் ஒன்றும் பேசவில்லை
நான் கம்யூனிஸ்ட் இல்லை
பின்னர், தொழிற்சங்கவாதிகளைத் தேடி வந்தார்கள்
நான் ஒன்றும் பேசவில்லை
நான் தொழிற்சங்கவாதி இல்லை
அதற்குப் பின்னர், யூதர்களைத் தேடி வந்தார்கள்
நான் ஒன்றும் பேசவில்லை
நான் யூதன் இல்லை
அடுத்து, கத்தோலிக்கர்களைத் தேடி வந்தார்கள்
நான் ஒன்றும் பேசவில்லை
நான் கத்தோலிக்கன் இல்லை
கடைசியாக, என்னைத் தேடி வந்தார்கள்
எனக்காகப் பேச அப்போது யாருமே இல்லை.

# வரவு செலவுத் திட்டத்தில் நிவாரணங்கள் எதிர்பார்ப்பும் மக்கள் கண்ட ஏமாற்றமும்





எம்.எஸ். அமீர் ஹுசைன்

அரசாங்கத்தின் 2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் மூலம் நிவாரணங்கள் கிடைக்கலாம் என்று எதிர்பார்த்திருந்த மக்களுக்கு எதுவும் இல்லாமல் பலத்த ஏமாற்றமே கிடைத்திருக்கின்றது. 20,000 ரூபா சம்பள உயர்வு அல்லது கொடுப்பனவு கிடைக்கும் என்று எதிர்பார்த்த அரச ஊழியர்களுக்கு 7,800 ரூபா வாழ்க்கைச் செலவுப்படி என்ற அடிப்படையில் மீண்டும் ஒரு கொடுப்பனவு மாத்திரம் வழங்கப்பட்டதாக இருக்கின்றது. மாறாக நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியை அதிகரிப்பதற்கான எந்தவிதமான வழிமுறைகளும் சொல்லப்படவில்லை. தொடர்ச்சியாக கடந்த 04 வருடங்களுக்கு மேலாக வாழ்க்கைச் செலவு உயர்வால் பாதிக்கப் பட்டுள்ள பொதுமக்களுக்கு அந்த வாழ்க்கைச் செலவு சுமையை இறக்கி வைப்பதற்கான எந்தவிதமான ஆக்கபூர்வமான மாற்று வழிகளும் முன்வைக்கப்படவில்லை.

2023 நவம்பர் மாதம் 13 ஆம் திகதி திங்களன்று நிதி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க 2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றினார். 2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட திடீர் அரசியல் மாற்றத்தின் பின்னர் புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்ற ரணில் விக்கிரமசிங்கவால் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டாவது வரவு செலவுத் திட்டமும் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் சமர்ப்பிக்கப்படும் 78 ஆவது வரவு செலவுத் திட்டமும் இதுவாகும். கடுமையான பொருளாதார நெருக்கடி நிலைமையொன்றுக்கு முகம் கொடுத்த பின்னர் ஒருவாறு நாட்டை பொருளாதார அபிவிருத்தி என்ற இலக்கை நோக்கி தள்ளிக்கொண்டு செல்லும் நெருக்கடியான பயணத்தின் சோதனை மிக்க கட்டமாக இந்த வரவு செலவுத் திட்டம் அவருக்கு அமைந்தது என்றால் அது மிகையாகாது. சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கம் காணப்பட்ட 300 கோடி ஐக்கிய அமெரிக்க டாலர் மதிப்புள்ள கடன் உதவி மற்றும் கடன் வழங்குவதற்காக நாணய நிதியம் விதித்துள்ள கடுமையான நிபந்தனைகள் ஆகியவற்றிற்கு மத்தியில் இந்த வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டது.

ஏற்கனவே சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடன் வழங்குவதற்காக பல நிறைவேற்ற முடியாத நிபந்தனைகளை விதித்திருக்கின்றது. அந்த நிபந்தனைகளை முழுமையாக நிறைவேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் முற்றாக பாதிக்கப்படுவது குறைந்த வருமானம் பெறும் அப்பாவி பொதுமக்களே. வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிக்கையில் நாட்டில் 11 இலட்சம் அரச ஊழியர்கள் உள்ளனர். அவர்களின் பின்னால் 50 இலட்சம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அதனால் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையிலும் அரசாங்கம் இந்த வாழ்க்கைச் செலவு படியை கொடுக்க நடவடிக்கை எடுத்தது என்றார்.

அதே நேரம் மறுபுறமாக 60 இலட்சம் தனியார் துறை ஊழியர்கள் உள்ளனர். அவர்களது பின்னால் எஞ்சியுள்ள மக்கள் தொகை உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. அத்துடன் நாட்டின் 35 இலட்சம் வறிய குடும்பங்கள் இருக்கின்றன. இவர்கள் “அஸ்வெசும” என்ற நிவாரண உதவிக்காக தெரிவு செய்யப்பட்டு அரச நிவாரண உதவிகளை பெற்று வருகின்றனர். ஆரம்ப கட்டத்தில் 15 இலட்சம் குடும்பங்களுக்கே இந்த அஸ்வெசும வறுமை நிவாரண உதவி வழங்கப்பட்டாலும் எஞ்சியுள்ள குடும்பங்களுக்கும் விரைவில் நிவாரண உதவிகள் வழங்கப்படும் என்பதை ஜனாதிபதி உறுதி செய்தார்.

மொத்தத்தில் அரச ஊழியர்கள், தனியார் தொழில் துறையினர் என்ற வேறுபாடு இல்லாமல் அனைவருமாக வாழ்க்கைச் செலவு உயர்வு என்ற கொடுமையால் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். இப்படியான ஒரு சூழ்நிலையில் தான் ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க இந்த வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளார்.

இலங்கை நாடு சுதந்திரம் அடைந்த 75 வருட கால வரலாற்றில் ஒருபோதும் சந்தித்திராத அளவிற்கு பொருளாதார நெருக்கடியொன்றை சந்திப்பதற்கான ஒரு பிரதான காரணம் 2005 ஆம் ஆண்டின் பின்னர் இருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் நிலவிய முறைகேடான நிதி மற்றும் பொருளாதார முகாமைத்துவமும் ஊழல்கள், மோசடிகள் என பொருளியல் வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன் உலகில் தோல்வி கண்ட சோசலிச சமூக உடமைவாத கொள்கையின் பின்னால் போனதும் சோசலிச நாடுகள் என்று கூறிக்கொள்ளும் நாடுகளை நட்பு நாடுகளாக கொண்டிருந்தமையும் இன்னொரு புறத்தில் பொருளாதார நலிவுக்கு காரணம் எனலாம். அதன் உச்ச கட்டமாக அமைந்தது இலங்கை மத்திய வங்கியில் சிறப்பெடுப்பு ஒதுக்கு (எஸ்.டி.ஆர்) என்று இருக்க வேண்டிய அமெரிக்க டாலர் முற்றாக காலியாகும் வரையில் அப்போதைய பொருளாதார வல்லுனர்கள் கண்மூடித்தனமான ஆட்சியை முன்னெடுத்ததால் 2021 ஆம் ஆண்டு நாடு மிக மோசமான நிலையை சந்திக்க நேரிட்டது எனலாம். ஆனாலும் இந்த சிறப்பெடுப்பு ஒதுக்கு இவ்வருடம் 35000 கோடி ரூபாவாக அதிகரித்திருப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

ஏற்கனவே இலங்கைக்கு கடன் வழங்கியுள்ள இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற சில நாடுகள் கடன் மீளமைப்புக்கு இணங்கிய நிலையில் புதிய கடன் வாங்கும் எல்லை இந்த வரவு செலவுத் திட்டத்தில் அதிகரிக்க அந்த தொகை 3900 பில்லியனில் இருந்து 7350 பில்லியன் வரை புதி கடன் வாங்க அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனாலும் ஏற்கனவே பெற்றுள்ள கடன்களுக்கு வட்டி செலுத்துவதற்காக 22000 கோடி ரூபா தேவைப்படுகின்றது. அத்துடன் இவ்வருடம் எதிர்பார்க்கப்பட்ட அரச வருமானம் 03 இலட்சத்து 41 ஆயிரத்து 500 கோடி என்று (3415 பில்லியன் ரூபா) மதிப்பிடப்பட்டிருந்தாலும் கிடைத்த வருமானம் 02 இலட்சத்து 41000 கோடி ரூபாய்கள் (2410 பில்லியன்) மாத்திரமாகும். மாதாந்த அரச செலவினமாக தேவைப்படுவது 38300 கோடி ரூபாய்களாகும். ஆனாலும் கிடைத்திருக்கின்ற வருமானம் 21500 கோடி ரூபாய்களாகும். அதன்படி பார்க்கின்ற போது மாதாந்த செலவினத்திற்காக துண்டு விழும் தொகை 16800 கோடி என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். இவ்வாறாக பார்க்கின்ற போது மொத்த அரச செலவினம் 7833 பில்லியன் ரூபாய்களாக இருக்கின்ற நிலையில் வருமானம் வீழ்ச்சியை நோக்கி சென்றிருக்கின்றது.

அத்துடன் பாதுகாப்பு செலவினத்திற்காக 423 பில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கின்றது. சுகாதார மருத்துவ வசதிகளை அதிகரிக்கும் நோக்கில் 410 பில்லியன்களும் கல்விக்காக 237 பில்லியன் (23700 கோடி) ரூபாய்களும் என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கின்றது. மேலதிகமாக புதிய விடயங்களாக தோட்ட வீடமைப்புக்காக 400 கோடி ரூபாய்கள் மற்றும் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு இடை நிறுத்தப்பட்டிருக்கின்ற அபிவிருத்தி திட்டங்களை மீண்டும் முன்னெடுப்பதற்காக 5500 கோடி ரூபாய்களும் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் மேலும் சில கல்வி, பல்கலைக்கழகங்கள், தகல் தொழில்நுட்பம், உள்நாட்டில் ஆங்கிலக்க ல்வி, பாடசாலை கிரிக்கட் என்று சிறிய சிறிய அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்கள் குறித்தும் வரவு செலவுத் திட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டிருக்கின்றது.

எதுவானாலும் மக்கள் இந்த வரவு செலவுத் திட்டம் தொடர்பாக பெரியளவில் எதிர்பார்ப்புக்களை கொண்டிருக்கவில்லை. காரணம் தொடரும் பொருளாதார நெருக்கடி என்ற பெரும் பூதாகரமான சூழ்நிலையில் எதிர்பார்க்கின்ற எதையும் கொடுக்கும் நிலையில் அரசாங்கம் இல்லை என்பதாகும். ஆனாலும் இருக்கின்ற நிலையிலாவது ஓரளவுக்கு அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவு உயர்வால் ஏற்பட்டுள்ள சுமையை குறைத்து போதுமான அளவில் அரசாங்கம் நிவாரணங்களை முன்வைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் இருந்தனர். அரச ஊழியர்களில் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேல் சம்பளம் பெறுபவர்கள் அவர்களால் செலுத்த வேண்டிய உழைக்கும் போதான வரி குறைந்தபட்ச நிலைக்காவது குறைக்கப்படும் என்ற எதிர்பார்ப்புடன் இருந்தனர். அந்த எதிர்பார்ப்பும் நிறைவேறவில்லை. இவ்வாறாக ஒருசில திருப்திப்படுத்தல்களுடன் முன்வைக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டம் மக்களை திருப்திப்ப டுத்துவதாக அமையவில்லை என்றே கூறலாம்.

அதிலும் அடுத்த வருடம் தேர்தல் ஆண்டாக இருக்கலாம் என்ற எதிர்பார்ப்பும் மக்கள் மத்தியில் இருக்கின்றது. ஆனாலும் அதற்கும் போதுமான சலுகைகள், வரப்பிரசாதங்களை வரவு செலவுத் திட்டம் கொண்டில்லை. அதுபற்றி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா தெரிவிக்கையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சுவர்க்கபுரியாக இருந்தாலும் மக்களுக்கு இந்த வரவு செலவுத் திட்டம் நரகலோகம் என்று கவலை தெரிவித்துள்ளார். கடன் எடுத்தல், அரச சொத்துக்களை விற்பனை செய்தல் தத்துவம் தான் கடைபிடிக்கப்பட்டிருக்கின்றது என்று ஜே.வி. பி யின் உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்கா தெரிவித்துள்ளார். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம் தெரிவிக்கையில் இந்த வரவு செலவுத் திட்டத்தில் மக்கள் திருப்தியடைவதற்கான எந்த விடயமும் இல்லை என்று கூறியுள்ளார்.

எவ்வாறோ நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்வதும் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை சமாளிப்பதும் என்ற விடயம் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக நடந்து வரும் செயலாகும். உள்நாட்டு உற்பத்தி துறைகளை முன்னேற்றுவது, மொத்த தேசிய வருமானத்தை அதிகரிக்கும் வழிகளை எவ்வாறு திட்டமிட்ட அடிப்படையில் முகாமைத்துவம் செய்வது, அதன் ஊடாக உள்நாட்டு மூலங்களிலான வருமானங்களை அதிகரிப்பது எவ்வாறு போன்ற பொருளாதார குறிகாட்டிகளிலான அபிவிருத்திகள் என்பன மிகவும் அடிப்படையான அம்சங் களாகும். அதனால் அந்தந்த துறைகளில் அதிக கவனம் செலுத்தாத வரையில் பண வீக்கத்தை குறைப்பது, பொருளாதார அபிவிருத்தியை நோக்கி நாட்டின் பொருளாதாரத்தை முன்நகர்த்துவது என்ற விடயங்கள் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்களாகும்.



அப்ரித் வஸீர்

# வெல்லப் போவது யார்? பலப் பரீட்சை இன்று!

கடந்த மாதம் 5ம் திகதி இந்தியாவில் ஆரம்பமாகிய ஐசிசி ஒருநாள் உலகக் கோப்பை இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.அகமதாபாத் மைதானத்தில் நவம்பர் 19ம் திகதி நடைபெறவுள்ள, உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் பலப்பரீட்சை நடத்த உள்ளன.

இதுவரையில் அவுஸ்திரேலியா 5 (1987, 1999,2003,2007,2015) உலகக் கோப்பைகளையும்,இந்தியா 2 உலகக் கோப்பைகளையும் ( 1983,2011) வென்றுள்ளது.இந்த முறை கிண்ணத்தை யார் வெல்வார் என்ற பலத்த எதிர்பார்ப்பு இரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

லீக் சுற்று மற்றும் அரையிறுதி போட்டிகளின் முடிவில், இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன. பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இந்த போட்டி வரும் 19ம் திகதி அகமதாபாத் மைதானத்தில் நடைபெற உள்ளது. இந் நிலையில் உலகக் கோப்பை மற்றும் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில், இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா இடையேயான போட்டிகளில் அதிகம் ஆதிக்கம் செலுத்தியது யார் என்ற கேள்வி உள்ளது.

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இதுவரை இரண்டு அணிகளும் 150 முறை நேருக்கு நேர் மோதியுள்ளன. இதில் அவுஸ்திரேலிய அணி 83 போட்டிகளிலும், இந்திய அணி 57 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளன. 10 போட்டிகளில் முடிவு எதுவும் எட்டப்படவில்லை. அவுஸ்திரேலிய அணி 49 முறை முதலில் பேட்டிங் செய்தும், 34 முறை சேஸிங் செய்தும் வெற்றி பெற்றுள்ளது. அதேநேரம், இந்திய அணி 33 முறை சேஸிங்கிலும், 24 முறை முதலில் பேட்டிங் செய்தும் வெற்றி பெற்றுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்தின் ஒருநாள் உலகக் கோப்பையில் இதுவரை இரு அணிகளும் 13 முறை நேருக்கு நேர் மோதியுள்ளன. அதில், அவுஸ்திரேலிய அணி 8 முறையும், இந்திய அணி 5 முறையும் வெற்றி பெற்றுள்ளன. இதில் இந்திய அணி முதலில் பேட்டிங் செய்து 3 முறையும், அவுஸ்திரேலிய அணி முதலில் பேட்டிங் செய்து 7 முறையும் வெற்றியை பதிவு செய்துள்ளன. 2003ம் ஆண்டு உலகக் கோப்பை இறுதிப் போட்டியிலும், 2015ம் ஆண்டு உலகக் கோப்பை அரையிறுதிப் போட்டியிலும் அவுஸ்திரேலியாவிடம் இந்தியா தோல்வியுற்றது குறிப்பிடத்தக்கது. அதேநேரம், நடப்பு உலகக் கோப்பை லீக் சுற்றில், அவுஸ்திரேலியாவை இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

இந்தியா ஏள அவுஸ்திரேலியா புள்ளி விவரங்கள்:

உலகக் கோப்பையில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக இந்திய அணியின் அதிகபட்ச ஓட்டங்கள் - 352

உலகக் கோப்பையில் இந்திய அணிக்கு எதிராக அவுஸ்திரேலிய அணியின் அதிகபட்ச ஸ்கோர் - 359

உலகக் கோப்பையில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக இந்திய அணியின் குறைந்தபட்ச ஸ்கோர் - 125

உலகக் கோப்பையில் இந்திய அணிக்கு எதிராக அவுஸ்திரேலிய அணியின் குறைந்தபட்ச ஸ்கோர் - 129

அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக அதிக ரன் சேர்த்த இந்திய வீரர் - ரோகித் சர்மா (2332 ரன்கள்)

இந்திய அணிக்கு எதிராக அதிக ரன் பெற்ற அவுஸ்திரேலிய வீரர் - ஸ்டீவ் ஸ்மித் (1306 ரன்கள்)

அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக அதிக விக்கெட் எடுத்த இந்திய வீரர் - ஜடேஜா (37)

இந்திய அணிக்கு எதிராக அதிக விக்கெட் எடுத்த அவுஸ்திரேலிய வீரர் - ஜாம்பா (34)

இரு அணிகளுக்கு இடையேயான போட்டியில் அதிகபட்ச தனிநபர் ஸ்கோர் - ரோகித் சர்மா (209 ரன்கள்)

மும்பை வான்கடே மைதானத்தில் இந்தியா - நியூசிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்திய நிலையில் புதிய சர்ச்சை ஒன்று கிளம்பியது. முதலாவது அரையிறுதி ஆட்டம் நடந்த ஆடுகளத்தை கடைசி நேரத்தில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் தலையிட்டு மாற்றிவிட்டது என்கிறது அந்த சர்ச்சை.

அதன்படி, இதே மைதானத்தில் இந்தியா - இலங்கை, தென் ஆபிரிக்கா - இங்கிலாந்து ஆட்டங்கள் நடைபெற்ற அதே பழைய ஆடுகளத்தில் தான் இந்தியா - நியூசிலாந்து அரையிறுதி ஆட்டமும் நடைபெற வேண்டும் என்று பிசிசிஐ விரும்பியதாகக் கூறப்படுகிறது.

அதை ஏற்று, ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த புதிய ஆடுகளத்தை விடுத்து, பழைய ஆடுகளத்தில் போட்டியை நடத்த ஐ.சி.சி. முடிவு செய்ததாகவும் சர்ச்சை எழுந்துள்ளது.




இந்த சர்ச்சைக்குப் பதிலளித்த சுனில் கவாஸ்கர், ”அனைத்து அணிகளுக்கும் ஒரே ஆடுகளம் தான் உள்ளது. எனவே இந்த ஆடுகளம் என்ன செய்யும், என்ன செய்யாது என்பது பற்றி அதிகம் விவாதிக்க வேண்டாம் என்று நான் நினைக்கிறேன். இதை நான் நம்புகிறேன்.

”ஆமாம், கொஞ்சம் ஸ்பின் இருக்கக்கூடிய ஒன்று இருக்கும், அதைப் பற்றி எந்தக் கேள்வியும் இல்லை. ஆனால் மும்பை ஆடுகளம் பொதுவாக பேட்டிங்கிற்கு மிகவும் சிறந்தது. எனவே அதிக சிக்கல் இருக்கக்கூடாது என்று நான் நினைக்கிறேன். எங்களிடம் உள்ள பந்துவீச்சு, சிறப்பாக பந்துவீசிய பந்துவீச்சாளர்கள், அவர்கள் முதலில் அல்லது இரண்டாவது பந்துவீசினாலும், ஆடுகளம் மிகவும் பிரச்சினையாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை.”

இது பொதுவாகவே உங்களுக்குத் தெரிந்த விஷயம்தான். போட்டிக்கு முந்தைய நாள் உங்களுக்கு எழுதுவதற்கு எதுவும் இல்லாதபோது, உங்கள் செய்திகளை இப்படியாக நிரப்ப விரும்புகிறீர்கள். அதனால்தான் நீங்கள் ஆடுகளங்களைப் பற்றிப் பேச விரும்புகிறீர்கள். அதுபோன்ற விஷயங்கள் என்னைப் பொறுத்தவரை எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்துவதில்லை. டாஸ் போட்ட பிறகு ஆடுகளம் மாறினால், அவர்கள் நிச்சயமாக அதுகுறித்து ஆலோசனை நடத்துவார்கள்,” என்று இந்தியா டுடேயில் கவாஸ்கர் கூறியுள்ளார்.

இந்திய அணி எந்த விதமான களத்தையும் கையாள்வதில் கச்சிதமாக உள்ளது. இதுவரை நடந்த போட்டிகளை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். மேலும் அது வரண்ட ஆடுகளமாக இருப்பதால், மழை பெய்துவிட்டதால் தான் அப்படியிருக்க வாய்ப்புள்ளது. அதனால் அங்கே எந்தவிதத்திலும் ஈரப்பதம் இருக்காது.”

இங்கிலாந்து அணியின் முன்னாள் கேப்டன் மைக்கேல் வாகனும் இந்த சர்ச்சை குறித்துப் பேசியுள்ளார். அரையிறுதிக்கு புதிய ஆடுகளத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று பரிந்துரைத்தார்.

“உலகக்கோப்பை அரையிறுதியை மட்டும் புதிய ஆடுகளத்தில் விளையாட வேண்டும். அது மிகவும் எளிமையானது,” என்று தனது எக்ஸ் சமூக ஊடக பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இதுபோன்ற நீண்ட தொடர்களில் ஆடுகளங்களை சுழற்சி முறையில் பயன்படுத்தும் போது கடைசி நேரத்தில் சில மாற்றங்கள் நடப்பது வழக்கமானது தான். இதற்கு முன்பும் சில முறை இதுபோல் நடந்துள்ளது. மைதான பராமரிப்பாளரால் இந்த மாற்றங்கள் செய்யப்பட்டன.” என்று பிபிசி நிருபர் நிதின் ஸ்ரீவஸ்தவாவிடம் இந்திய கிரிக்கெட் கவுன்சிலின் செய்தி தொடர்பாளர் ஒருவர் கூறியுள்ளார்.

”ஐ.சி.சி.யின் சுயேச்சையான ஆடுகள ஆலோசகர் இந்த மாற்றம் பற்றி முழுமையாக அறிந்திருந்தார். இந்த ஆடுகளத்தில் ஆட்டம் சிறப்பானதாக இருக்காது” என்றும் அவர் கூறியுள்ளார்.

தொடர் வெற்றிகளை இந்தியா பெற்றிருந்தாலும் பல்வேறு சந்தேகங்கள் கிரிக்கெட் இரசிகர்கள் முதல் கிரிக்கெட் பிரபலங்கள் வரை எழுந்துள்ளது.இந்தியா பந்து வீசும் போது மட்டும் வேறு ஒரு பந்தை ஐசிசி வழங்குகிறது என்று அண்மையில் பாகிஸ்தான் முன்னாள் வீரர் ஹசன் ராசா கூறியது சர்ச்சையை ஏற்படுத்தியது.

இது இவ்வாறு இருக்க, இந்திய அணிக்கு சாதகமாக நாணய சுழற்சி விழுவது குறித்து முன்னாள் பாகிஸ்தான் வீரர் சிக்கந்தர் பக்த், பாகிஸ்தானில் உள்ள உள்ளூர் தொலைக்காட்சியில் பேசிய போது பகிரங்க குற்றச்சாட்டை முன்வைத்து இருக்கின்றார்.

அதில் இந்தத் தொடரில் ரோஹித் சர்மா நாணய சுழற்சியில் பிக்சிங் செய்து இந்தியாவுக்கு சாதகமாக விளையாடுகிறார். இதற்கு ஐசிசி அதிகாரிகளும் இந்தியாவுக்கு உடந்தையாக செயல்படுகிறார்கள் என்றார்.

டாஸ் வீசும் போது ரோகித் சர்மா டாசை எதிரணி கேப்டனிடம் இருந்து அதிக தூரம் வீசுகிறார். இதன் மூலம் டாசை எதிரணி கேப்டன் சென்று பார்க்க முடியாது. இதனை பயன்படுத்திக் கொண்டு போட்டி நடுவரும் இந்தியாவுக்கு சாதகமாக டாசை கூறுகிறார்கள் என்று ஒரு பகிரங்க குற்றச்சாட்டை வைத்தார்.

இதேவேளை, அண்மையில் இந்தியாவுக்கு சாதகமாக டிஆர்எஸ் முடிவை மூன்றாம் நடுவர் மாற்றுவதாக பாகிஸ்தான் வீரர் ஹசன் ரசா குற்றச்சாட்டு முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இதனை இந்தியர்கள் கண்டித்து வருகின்றனர்.எனினும் இந்த சந்தேகங்கள் உண்மையாக இருக்கலாம் என இரசிகர்கள் மத்தியில் கருத்து உள்ளது.இந்திய அணி ஏனைய நாடுகளை விட இந்தியாவில் விளையாடும் தொடர்களில் தங்களுடைய ஆதிக்கத்தை செலுத்துவதும் ஒரு வகையில் கேள்வி எழுந்துள்ளது.




இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.